# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு தைமாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்


# கிறீஸ்தவ ஐக்கிய அழைப்பின் மணிக்குரல்

## யேசு முறையிடுகின்றார்

நம்மை எசமானென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நமக்கு அமைகிறீர்களில்லை.
நம்மை ஒளியென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மைப் பார்க்கிறீர்களில்லை.
நம்மை வழியென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்முடையவழியில் நடக்கிறீர்களில்லை.
நம்மைச் சீவியமென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மை நாடுகிறீர்களில்லை.
நம்மை ஞானமுள்ளவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மைப் பின்பற்றுகிறீர்களில்லை.
நம்மைச் சௌந்தரியமுடையவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மை நேசிக்கிறீர்களில்லை.
நம்மைத் திரவிய சம்பன்னரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மைக் கேட்கிறீர்களில்லை.
நம்மை நித்தியமானவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மைத் தேடுகிறீர்களில்லை.
நம்மை கருணையுடையவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மை நம்புகிறீர்களில்லை.
நம்மை மகத்துவமுடையவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நமக்குச் சேவைசெய்கிறீர்களில்லை.
நம்மைச் சர்வவல்லவரென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நம்மைக் கனம்பண்ணுகிறீர்களில்லை.
நம்மை நீதிபரனென்று நீங்கள் அழைக்கிறீர்கள்,
ஆனால், நமக்குப் பயப்படுகிறீர்களில்லை.

ஆகவே, நாம் ஓர்நாள் நடுவராயிருந்து உங்களுக்குத் தண்டனை விதித்தால் நம்மில் குற்றஞ் சொல்லாதீர்கள்!

கிறீஸ்தவஐக்கியத்துக்காக் அருளப்பபாப்பரசர் விடுத்த அழைப்பானது, ரோமாபுரிமதில்களுக்கு வெளியேயுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்துக்கு அவரால் அன்பளிப்புச் செய்யப்பெற்ற 11,000 ருத்தல் நிறைகொண்ட புதியகண்டாமணியின் பேரோசையாலே வரப்போகும் வருடங்களில் பிரதிபலித்துக் கொண்டிருக்கப் போகிறது.

இந்தப்பிரமாண்டமான கண்டாமணியினதும், மற்றும்ஆறுபுதிய கண்டாமணிகளினதும் அன்பளிப்பானது, அருளப்பபாப்பரசர் பாப்பானவராகத் தெரியப்படுவதற்குமுன் தொடங்கிய ஓர் சம்பவத்தை ஆரம்பமாகக் கொண்டிருக்கின்றது. தம்மைப் பாப்பானவராகத் தெரிவுசெய்யவிருந்த கருதினால்மார்சங்க திருக். கூட்டத்திற்குச் சமுகமாகுமுன் அப்போது கருதினால்ரொங்கல்லியென அறியப்பெற்றிருந்த அருளப்பபாப்பரசர் இந்த அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தைத் தரிசித்தார். அவர் ரோமாபுரிசெல்லும் ஒவ்வோர்முறையும் அதனைத்தரிசிப்பது அவருடைய வழக்கமாயிருந்தது.

பாப்பரசர் ஓர்கருதினாலாயிருந்து கடைசிமுறையாக அதைத்தரிசித்தபோது அதனுடன்சேர்ந்துள்ள ஆசீர்வாதப்பர் சபை ஆச்சிரமத்தின் மடாதிபரான டி'அமாற்ரேமேற்றிராணியார்அவரைச்சந்தித்து, "1658-ம் ஆண்டு ஆலயமணிக்கோபுரத்தில் ஏற்றப்பட்ட ஆறுமணிகளும் தற்போது இசைநயமுள்ளனவாய் இசைப்பதில்லை; அவைகளுக்கு இசைக்கருவிநாக்கு இப்போதில்லை; கடந்தநூறு வருடகாலத்திலே இந்தமணிகளில்இரண்டு திரும்பவும்வார்க்கப்பட்டன. ஆனால், இவைகள் இன்னுமே இசையற்றிருக்கின்றன"எனத் தெரிவித்துக்கொண்டார்.

சென்ற 1959-ம் ஆண்டு தை மாதம்25-ம்திகதியன்று அர்ச். பாவிலுவானவர் (சின்னப்பர்) மனந்திரும்பியதிருநாளைக்கொண்டாடுமுகமாக அருளப்ப பாப்பரசர் அர்ச். பாவிலுவானவர் மகா தேவாலயம்சென்றார். அப்போதுதான் திருச்சபைப் பொதுச்சங்கத்தைக் கூட்டுவதென்ற தமது உள்ளக்கிடக்கையை அவர்பகிரங்கமாக அறிவித்தார். அங்கே அத்தருணம் ஆசிர்வாதப்பர் சபைச் சந்நியாசர்களுடன் வழமைக்குமாறாக அவர் சம்பாஷிக்கும்போது, அம்மகாதேவாலயத்திற்குப் பிரமாண்டமான கண்டாமணிஒன்றைச் சந்மானிப்பதற்குத் தாம்செய்துள்ளதிட்டத்தை வெளியிடலானார். ஏனைய மணிகளும் வழங்கப்படுமென அவர்தெரிவித்தார்.

அதுமுதல் ஆறுமணிகளில் ஐந்தும் அவற்றின் அதேவெண்கலத்திலிருந்து திரும்பவும் வார்க்கப்பட்டுள்ளன. இவைகளைத் திரும்பவார்க்கும் செலவைப் பாப்பரசர் பிறந்த இடமாகிய சொட்டோ இல் மொன்ரேஎனும் கிராமத்துக்குச் சமீபமான பேர்க்காமோ நகரும், அவரின் முன்னாள் பத்திறியாக்குஸ்தானமான வெனிஸ்நகரும் கொடுத்திருக்கின்றன.

---

### சுதந்திர ஜேர்மன்குடியரசின் கத்தோலிக்க பெருந்தலைவர்

# டக்றர் கொன்ரூட் அடினோர்

**சுதந்திர மேற்கு ஜேர்மனியின் சான்ஸலரான டக்றர் கொன்ரூட் அடினோர் அவர்கள் நிகழும் தைமாதம் 22-ந் திகதியன்று பாப்பரசரால் நல்வரவேற்றுப் பேட்டியருளப்பெற்றார்.** — தந்திச்சமாச்சாரம்.

(முன் தொடர்ச்சி)

வயதுவந்து அறிவும்,ஆற்றலும் வளர்ச்சியடைந்தபின் அரசியல் விஷயங்கள் அவர்கவனத்தை ஈர்ந்தன. அதனால் 1906-ம் ஆண்டு கொலோன்நகர் முனிசிப்பல்சபையில் ஓர்அங்கத்தவராக அவர்தெரிவுசெய்யப்பெற்றார். அன்றுதொடங்கிய அவரின்அரசியல்வாழ்வு படிப்படியாக மேல் நோக்கியபடியே சென்றுகொண்டிருந்தது. 1912-ம்ஆண்டு கொலோன்நகர் முனிசிப்பல்சபையின் உதவிமேயராக அவர்பதவியேற்றார். 1917-ம்ஆண்டு அந்நகரின் "லோட்மேய"ராயினார். அது முதல் 1933-ம்ஆண்டுவரை இப்பதவியை அவர் வகித்துவந்திருக்கிறார்.

பதினாறுவருடங்களுக்குமேல் அவர் கொலோன்நகரின் "லோட்மேய"ராக இருந்தபொழுது அந்நகரின்தோற்றத்தையே மாற்றியமைத்தார். சர்வகலாசாலைகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள்யாவும் நவமாகக் கட்டியெழுப்பப்பட்டன. நீச்சல்தொட்டிகள் இளைப்பாறும் தலங்கள், புதிய வீதிகள்தோன்றின. சமூகசேவைகளும், கலாசாரவிருத்திப்பணிகளும் மும்முரமாக நடைபெற்றன.

அவரது ஆட்சியைக்கவனித்து அதிசயித்தவர்களெல்லாம் "கொலோன்நகரைப்பற்றிப் பேசுபவர்கள் முந்த அந்நகர பிதா கொன்ரூட் அடினோரைப்பற்றி அறிய வேண்டும்"என்று கூறிவந்தார்கள். அவரதுசேவையை நன்கு உணர்ந்த சர்வகலாசாலைகள் அவருக்குக் கௌரவகலாநிதிப் பட்டங்கள் வழங்கின.

நகரத்தை மாற்றியமைக்கும் அதே [illegible] யல்விஷயத்திலும் அவர் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். ஜேர்மனிய கத்தோலிக்கர் அந்நாட்களிலே அரசியல்துறையிலும் தங்களைஸ்தாபனரீதியில் அமைத்துவந்தனர். கத்தோலிக்கசமயம் சன்மார்க்கநெறிகளைமட்டும் போதிக்கவில்லை, அரசியல்நெருக்கடிகளுக்கும் பரிகாரம்கண்டிருக்கிறதென்று அந்நாட்களில் அவர்கள் கண்டறிந்தனர். 1922-ம் ஆண்டு மூனிச்நகரில் கூடிய கத்தோலிக்கமகாநாட்டுக்குக் கொன்ரூட் அடினோர்அவர்களே தலைமைவகித்தார்.

அவருடைய அரசியல்கொள்கைகள் பலரிடையே காரசாரமான விவாதத்தையும், மனக்கசப்பையும் உண்டுபண்ணியிருந்தன. அவரைச் "சான்ஸல"ராக நியமிப்பதென்று பேச்சுவார்த் [illegible] நடைபெற்றகாலம் அது வாகும். அவரதுசகாக்களும், ஆதரவாளர்களும் அவரைப் பதவியிலேற்ற வேண்டுமென அரும்பாடுபட்டார்கள். ஆனால், ஜேர்மன் அரசியல்அரங்கில் ஹிற்லர்என்ற கதாநாயகன் தோன்றியதும் அடினோர்,திரைமறைவுக்கு

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ராகலை, தமிழ்க் கத்தோலிக்க

## சேவாசங்க மகாநாடு

நிகழும் 1960-ம்ஆண்டு தைமாதம் 17-ம்திகதி ராகலை, தமிழ்க்கத்தோலிக்க சேவாசங்க மூன்ருவதுவருடாந்தமகாநாடு மாவாத்தோட்டத்து அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் விமரிசையாக நடைபெற்றது. பூசைமுடிந்ததும், வண. சி. சூசைப்பிள்ளை சுவாமியவர்களால் செபத்துடன் கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்மேல் தலைவர் திரு. எஸ். சாமுவேல்அவர்கள் முன்னுரையாகக் கிறிஸ்தவதொழிலாளர் இயக்கம்பற்றி எடுத்துரைத்தார். பின்னர் பொதுக்காரியதரிசி திரு. வி. எஸ். அந்தோனி அவர்கள் வருடாந்த அறிக்கையை வாசித்தார். திரு. எம். அம்புறோஸ்அவர்கள் சென்றவருடக் கூட்ட வரவுசெலவுவிபரங்களை வாசித்தார். பின்னர் புதியவருடத்திற்கான உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். பொதுத்தலைவர்: திரு. ஏ. சாமுவேல், உபதலைவர்: ஜே. பெஞ்சமின், பொதுக்காரியதரிசி: திரு. வி. எஸ். அந்தோனி, பொக்ஷாதிபர்: திரு. எம். அம்புறோஸ், மற்றும் இருகிளைஸ்தாபனங்களில் உபதலைவர்: ராகலை திரு. வி. ஏ. தேவசகாயம், காரியதரிசி: திரு. அந்தோனிமுத்து, பொக்ஷாதிபர்: திரு. அந்தோனி. வத்துமுல்லை, உபதலைவர் திரு. ஜி. லாசர், காரியதரிசி: திரு. அமுல்தாஸ், பொக்ஷாதிபர்: திரு. செல்வராஜ். இவர்கள் அனைவரும் புதியஉத்தியோகஸ்தர்களாய்த் தெரிவுசெய்யப்பட்டார்கள். திரு. எஸ். எஸ். பொன்னுத்துஅவர்களால் கிறிஸ்தவ தொழிலாளர்மத்தியில் இருக்கவேண்டிய ஒற்றுமையையும், கம்யூனிஸ்த நாஸ்திகர் செய்யும் கொடுமைகளையும், தனதுஆத்மீக சம்பவத்தைப்பற்றிய சிலபொன்னுனவார்த்தைகளையும் எடுத்துரைத்தார். வண.

சூசைப்பிள்ளை சுவாமியவர்கள் கூட்டத்திலுள்ள குறைபாடுகளைப்பற்றியும், தாய், தந்தையர் தங்கள்பிள்ளைகளை வளர்க்க வேண்டியவகையைப்பற்றியும் பேசினர். அதன்மேல் கூட்டத்திற்குச் சமுகமளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிதெரிவித்து, ஓர்சிற்றுண்டி உபசாரணை நடைபெற்றது. பின் சமுகமளித்திருந்த மற்றும்பெரியோர்களுக்கும், திரு. ஏ. கே. சந்தனம் அவர்கட்கும் உள்ளங்கனிந்த நன்றி தெரிவித்துச் செபத்துடனும், குருவரின் ஆசீருடனும் கூட்டம் இனிது முடிவுடைந்தது.

எஸ். சாமுவேல்

## நன்கொடைவிழா

தூவணைவாலிபர்களின் அயராமுயற்சியாலும், கொச்சிக்கடை நகராண்மைக்கழகத்திலே தூவணைவட்டாரப் பிரதிநிதி திரு. டி. பி. குறேருஅவர்களின் தூண்டுதலாலும் மூன்ருவது வருட "நன்கொடைவிழா" 10-1-60 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்5மணியளவில் தூவணைமைதானத்தில் இளைப்பாறியநீதவான் திரு. குயின்றின் பெர்னண்டோ அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

சிறுசொற்பொழிவுகள் இடம்பெற்றன. திரு. டி. பி. குறேருஅவர்கள் தலைவரை அறிமுகம்செய்துவைத்தபின் இவ்வூர்வாசிகளுக்கு அரியஅறிவுரைகளை அளித்தார். பின்னர்ஆசிரியர் திரு. ஆர். ஜே. சி. கூஞ்ஞுஅவர்கள் "வாலிபர்களே! ஒற்றுமைகொள்வோம், திரண்டுவாரீர்" என்றகூற்றைப் பீடிகையாகக்கொண்டு அவர்களுக்கு ஒற்றுமைஉணர்ச்சியையூட்டி அரியதோர் உரைநிகழ்த்தினர். தொடர்ந்து சமூகத்தொண்டன் திரு. நடனம் அவர்கள் சமூகசேவையின் ஆவசியகம் பற்றி அழுத்தமாக எடுத்துரைத்தார்.

அடுத்தபடியாகத் தலைவர் இளஞ்சிருர்கட்கு நன்கொடைப்பரிசில்கள் வழங்கியபின் தூவணைமக்களின் பிரதிநிதி திரு. டி. பி. குறேருஅவர்களின் சேவைநலனையும், மக்களின்உன்னத பண்புநலனையும் வியந்துகுறிப்பிட்டார். நேயர்களை மகிழ்விக்கும் முகமாக இசைக்குழுநடாத்திய "அனுதை" என்ற இனிய "இசையும்கதையும்", வேட்றம் பெரேரா வாத்தியக்கோஷ்டியாரின் இசைமீட்டும் பலாதும் பாராட்டைப்பெற்றன. ஈற்றில், நன்கொடைவிழாச்செயலாளர் ஜே. பி. ஜி. றெட்றீகுஅவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவாயிற்று.

செயலாளர்.

## மரண அறிக்கை

நெடுந்தீவுப் பங்குக்கோவில் கணக்கப்பிள்ளை சு. கவிரியேல்என்பவரின் மனைவியும், தொம்மாசி, யோசேப்பு, அருளாசி, மரியம்மா, ஆரோக்கியம், அந்திரேஸ், ஆபர் உக்போட்சுக்கானி, எம். ஏ. இலாகா, மைக்கேல், சுவாம்பிள்ளை ஆகியோரின் தாயாரும், அ. பிறுன்சீஸ்அம்மாவின் மாமியாரும், எனதுசகோதரியுமாகிய அந்தோனியா என்பவ தனது75-வதுவயதில் அந்திய தேவதிரவிய அனுமானங்களை நல்லறிவுடன்பெற்று 13-1-60 புதன்கிழமை அமலனின்கரங்களில் தன்னுடைய ஆன்மாவைஒப்படைத்தார். வண. ஜே. சிங்கராயர்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிச்சென்று கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, இவளின் பூதவுடல் நலலடக்கம்செய்யப்பட்டது. இதனைக்கண்ணுறும் குருமார், சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிகள், கிறீஸ்தவர்கள் இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொ. மரியாம்பிள்ளை

## உல்லாச பவனி

தைத்திங்கள் 12-ம்நாள் செவ்வாய்க்கிழமை எமக்கு ஓர்மகிழ்ச்சியான தினம். அன்றுகாலை 7மணிக்கு எம்மை ஏற்றிச்செல்லவிருந்த இரதம் அர்ச். நீக்கிலார்ஆலயவளவில் வந்துநின்றது. மரியாயின் சேனைத்தலைவி, மரியாயின் சேனைச் சகோதரர்சகோதரிகள் யாவரும் வண. எல். யோசவ்சுவாமி அவர்களால்நிறைவேறிய திவ்விய்பூசை கண்டதும் இரதத்தில்ஏறி அமர்ந்துகொண்டோம். "ஆவேமரியா" என்ற கீதம்இசைக்க அதுவும் நகரத்தொடங்கினது. யானையிறவுஉப்பளத்தை தூரக்கண்ணால் பார்வையிட்டோம். நேரே பரந்தன்தொழிற்சாலைக்குப் பறந்து சென்ருேம். எம்மூர்வாசியான செல்வன்சிங்காராயர் நவரத்தினம்என்பவர் அங்குள்ள பாரியஎந்திரங்களையும், அவைகளை வேலைகொள்ளும் முறைகளையும்பற்றி முகமலர்ச்சியுடன் விளக்கம் தந்தார். தற்கால நவீனமுறைகளை மனிதன்கையாளும் விதத்தைஎண்ணி வியப்படைந்துகொண்டு அவருக்கு நன்றிகூறிப் புறப்பட்டோம். குறித்த இடமாகிய கிளிநொச்சியில் இரதம் எம்மை இறக்கிவிட்டுப் பிரியாவிடை கூறிப் பிரிந்துசென்றது. மரியதாயின் சேய்களாகியநாம் அருகேயிருந்த குருமாரின் கமத்தொழில்பாடசாலை சென்று இளைப்பாறினேம். 12மணியளவில் அண்மையிலுள்ள லூர்துபதியைத் தரிசிக்கச்சென்ருேம். 1-30 மணியளவில் பகல்போசனத்தை முடித்துக்கொண்டோம். சிறிதுவேளையின்பின் எம்மிடையே கீதம், நடனங்கள் மகிழ்ச்சி தரும் முறையில் உச்சநிலை அடைந்தன.

பிற்பகல் 3 மணியளவில் சுவாமியாருக்கு ஆர்ப்பரிப்புக் கூறிவிட்டு வீதிவழியே உல்லாசபவனிவந்தோம். ஜலஜலஎன்ற ஆற்ருேசை. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்." ஆம், அவ்வூருக்கு ஓர்தனிஅழகை ஆறுதருகின்றது. பச்சிளஞ்சோலைகள் எம்மை வருகவருகஎன்று வரவேற்றன. 4-30 மணியளவில் மிருசுவில் வாசரான கிளிநொச்சித் தபாற்கந்தோர்தலைவர் எம்மை வரவேற்றுத் தேநீர்விருந்தளித்து உபசரித்தார். 5மணியளவில் 5மைலுக்கப்பாலுள்ள இரணைமடுக்குளத்தைக் கார்களின்மூலம் பார்வையிடச்சென்ருேம். எத்துணைபிரமாண்டமான அணைக்கட்டு. அயராது தன் தொழிலைச் செய்துகொண்டிருக்கும் ஆற்றுவேகம்அளித்த காட்சியின் மாட்சிதான் என்னே! அதனுல்மறுமுறையும் எமதுஇன்பஉலாவை இவ்விடத்தில் கழிப்பதெனத்திட்டம்செய்துள்ளோம். மனதிற்கேற்ற மனோரம்மியம். சோகரியமானகாற்று ஜில்என்றுவீசியது.

6-35மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு அர்ச். தெரேசம்மாள்கோயிலை அடைந்து இறைவழிபாடுசெய்தோம். அப்போது எம்மைஏற்றிச்சென்ற இரதம்மீண்டும்வந்து எமதுவரவை ஆவலோடுஎதிர்பார்த்திருந்தது. நாம் அடைந்த இன்பத்திற்கு இரதம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டதென எண்ணினேம். பின்புயாவரும் கட்டளைக்குரவருக்கு வந்தனம்கூறி இரதத்தில் ஏறினேம். பாப்பாசரின் கீதத்தை இனிதேபடித்தோம். இரதம்வீடு போய்ச்சேர வேண்டுமென்று வேகமாக மிருசுவில்பதியை இரவு8மணிக்கு வந்தடைந்தது. ஈற்றில், எமக்குச் சகலஉதவிகளும்புரிந்த தபாற்கந்தோர் தலைவருக்கும், அவரின்சுற்றத்தவர்கட்கும், மற்றும்பல உதவிகள் புரிந்த சகோதரர்களுக்கும், இன்னும்பிரயாணத்திற்கு உதவியளித்த வண. எல். யோசவ் சுவாமியவர்களுக்கும், சேனைத்தலைவிக்கும், அரும்பிரயாசையெடுத்த சகோதரர்களுக்கும் அன்பு நிறைந்த நன்றிகூறுகின்ருேம்.

—நிருபர்.

# ஜெருசலேம் தேவாலயத்தில் திருக்குழந்தை

[மொஸ்ஜியெல்நகர் திருச்சிலுவைக் கல்லூரியில் பரிசுத்த வேதாகம போராசிரியர் வண. ஆர். கொக்ஸ், C. M., S. T. L., S. S. L. சுவாமிகள் செபமாலையின் நான்காவது காரணிக்கத்துக்குத் தந்துள்ள வியாக்கியானம்.]

பின்மாரியிலே குளிரும், ஈரலிப்புமான காலைவேளையாய் இருந்தது. பெத்தலேமிலிருந்து ஒரு கழுதையின் மேல் இருமணிநேரப் பிரயாணத்தின் பின் மரியம்மாளின் காங்களும், பாதங்களும் ஏறக்குறைய முழுமையாக விறைத்துப்போயிருந்தன. நாற்பது நாட் திருக்குழந்தை அவள் காங்களில் முடங்கிக்கிடந்தது. குளிரானகாற்று போர்வைக் கம்பளியை ஊடறுத்துக்கொண்டு உட்புறஞ்சென்று திருக்குழந்தையின் சின்னஞ்சிறிய வதனத்தில் மெத்தென வீசிக்கொண்டிருந்தது.

ஜெருசலேம் தேவாலயத்தில் எப்பொழுதாயினும் பிரவேசித்த மகாவிசேஷப்பட்ட தரிசகராயிருந்தார் திவ்வியயேசு. அதனுல் ஆலய முற்றத்திலே சிவப்புவர்ண இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்குமென்றும், பிரதான குருவாகிய மத்தியாஸ—ம், ஏரோது மன்னனுமாகிய இஸ்ருயேலின் முக்கியஸ்தர்கள் இருவரும் அதிகாரபூர்வமாக அவருக்கு வரவேற்பளிக்க அங்கு காத்துக்கொண்டிருப்பார்களென்றும் எவரேனும்எதிர்பார்த்திருக்கலாம். ஆனுல், அத்தகைய ஆடம்பரம் யாதொன்றும் அங்கு நடக்கவில்லை. சிமியோனும், ஆனுளுமென்ற முக்கியத்துவமற்ற இருவர் மாத்திரம் அங்கு நின்ருர்கள்.

பிரதானகுரு தனது மாளிகை வாசஸ்தலத்தில் அமர்ந்திருக்க, அரசன் ஜெரிக்கோ நகரிலே மிருதுவான காங்கையுள்ள சுகாத்தியத்தில் சுகமனுபவித்துக்கொண்டுதூரத்திலிருக்க, இந்த இருவரும் திவ்விய கர்த்தருக்கு வரவேற்பளிப்பதில், ஓர்அடிமையைப் போலத் தம்மையே தாழ்த்திக்கொண்டவருக்கு அதிகம் மனதை உருக்கத் தக்கதும், உகப்பை அதிகம் உண்டு பண்ணத் தக்கதுமான யாதாகிலும் ஒன்று இருக்கத்தான்செய்கிறது.



ஏரோதனே அன்றேல் மத்தியாஸோ இருவரிலும் எவராவது அறியவாராத மகாவிசேஷப்பட்ட ஓர்தினம் வந்தது. உண்மையான அரசரும், சம்பூரண குருவும், இஸ்ருயேலுடைய வாழ்க்கையின் மத்தியதானமாய் விளங்கிய தேவாலயத்தில் ஆசாரமுறைப்படி காட்சியளித்தார்.

ஓர் குருவானவர் பலி ஒப்புக்கொடுக்கிறவராய் இருக்கிருர். திவ்வியயேசு தம்மைத்தாமே பலியாக—பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பூரண பிரியத்தை உண்டுபண்ணுவதான அங்கீகரிக்கப் படத்தக்க உண்மையானபலியாக மாத்திரம் தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கின்ருர். அவர் ஒரு அரசாகவும் இருந்தார். ஆனுல், ஓர்உலகஇராச்சியத்தின் அரசாக அல்ல, ஆனுல், மானிட ஆத்துமங்களின் அரசாக இருந்தார்.

சிமியோன்முனிவர் அங்குவந்ததும், திருக்குழந்தையைத் தமதுகரங்களில் ஏந்தியெடுத்ததும் மாதர்களின் முற்றத்திலாகும். அவர் எதற்காகவந்தாரென்று அவரைமுன்னதாக அப்போதே சிமியோன் அறிந்துகொள்ளுகின்ருர். அதாவது சர்வேசுரனின் பணிக்கெனத் தம்மை அர்ப்பணஞ்செய்யும் மெஸியா — இரட்சணிய அலுவலைத் தொடக்குமாறு தமது பிதாவினவீட்டுக்குத் திருச்சுதன் கடைசியாக வந்துவிட்டார்.

இன்னும் திவ்வியயேசுவின் குருத்துவதொண்டு நடத்திமுடிக்கப்படவிருந்த அவருடைய சிலுவைமரணத்தைப்பற்றியும், அதன்மூலம்அவர் சகல சாதிசனங்களுக்கும் அரசாகவிருக்கிருர் என்பதையும் சிமியோன் தமது ஞானசிருஷ்டியில் மின்னொளிபோல் கண்டுகொள்ளுகிருர்.

மரியம்மாளும் ஓர்பங்கைக் கொண்டிருந்தாள். அவள் திவ்வியயேசுவைப் பெற்றெடுப்பதும், அவருடைய குழந்தைப்பிராயத்திலே அவரைவளப்பதும் மாத்திரமல்ல, அவருடைய இரட்சணியஅலுவலிலே அவருடன் ஈடுபடவுமிருந்தாள்.

"பிரசாத பூரணியே" என்ற கபிரியேல்அதிதூதரின் மங்களவாழ்த்து ஓர் ஆழ்ந்தகருத்தைக் கொண்டது. தம்முடைய திருக்குமாரனின் இரட்சணிய மரணத்தின் பெறுபேறு— மனிதவர்க்கம் முழுவதின்மேலும் பொழியப்பட்ட வரப்பிரசாதம் மரியாயின்மூலமாகமட்டும் உலகத்துக்கு வாவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குருவானவரின் கண்கள் திரும்பவும் பார்க்கின்றன

"ரைபோபிட்" எனப்படும் அதிசாரசுரம் கடுமையாகக் கண்டமையாலே பிறந்துசிறிதுகாலத்துள் தனது கண்களின்பார்வையை இழந்து குருடியான ஓர் இத்தாலியபெண்பிள்ளை இற்றைக்கு மூன்றரைவருடங்களின்முன் டக்டர்ஒருவர் தனதுகண்களைமூடிக் கட்டியிருந்த கட்டுத்துணியை அகற்றும்வரை உறுதியுடன் பொறுத்திருந்தாள். தற்போது 22வயதுடையவளான அமாபிலே றற்றிஸ்ரெல்லோஎன்ற இந்தப் பெண்பிள்ளை எதையும்வாசிக்கக் கூடியவளாய் இருக்கிறாள். ஓர் மோட்டர்ஸ்கூட்டரிலே வாகனப் போக்குவரத்தும், வியாபாரப் புழக்கமும் அதிகமாகவுள்ள மிலான்நகர்வீதிகளில் நடமாடிவருகின்றாள். சாய்ப்புகளுக்குச் சென்று தனக்குத்தேவைப்படும் நிறப்புடவைகளைப் பார்த்துவாங்குகிறாள். இத்தாலியவானவெளியைப்பார்த்து ஆச்சரியமடைகின்றாள். இந்தப்பெண்பிள்ளை காலஞ்சென்ற வண. கார்லோ ஜினொக்கி சுவாமியாரிடமிருந்து பார்வையாகிய மரணசாதனத்தைப் பெற்றுக்கொண்ட இரு பெண்பிள்ளைகளில் ஒருத்தியாவள். சுவாமியார் 1956-ம்ஆண்டு புற்றுநோயால்வருந்தி மரிக்குமுன் குருட்டுப்பிள்ளைகளுக்கென்று தமதுகண்களை மரணசாதனம் செய்திருந்தார். இந்தமரணசாதனத்தால் பார்வையடைந்த மற்றப்பெண்பிள்ளை றோமைநகரைச்சேர்ந்த ஆஞ்செஜலோ கொலான்கிறான்டேஎன்பவளே.

---

### திருச்சபையுடன் சமாதானத்தை நாடுகின்றார் ரிற்றோ

யூகோசிலேவியாவின் ஜனாதிபதிரிற்றோ அன்றுபேசியபோது, தமதுநாட்டுக்கும், கத்தோலிக்க திருச்சபைக்குமிடையிலுள்ள இராசியஉறவுகளை முன்போல நிலைப்படுத்த அவசியம்ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். சிலேவினியாவிலே அர்ச்சியசிட்டர்களான சிறில்-மெதடியஸ் சபையைச்சேர்ந்த குருமாருடன் பேசியபோதுதான் அவர் இவ்விதம் தெரிவிக்கலாயினர். "திருச்சபைக்கும், யூகோசிலேவிய அரசாங்கத்துக்குமிடையே முன்பு இருந்ததைக் காட்டிலும் இந்த இராசியஉறவுகள் தற்போது "அதிகம்நன்றாய்" இருக்கின்றன; கோவில்செல்லுகின்ற விசுவாசிகளுக்கு மாறாக நாம் யாதொன்றும் செய்வதில்லை; இது சம்பந்தமாய் எந்தவிதமான கஷ்டங்களும் விளைக்கமாட்டோம்; கஷ்டங்கள் எழுந்தால் அவைகளைத்தீர்த்துவைப்போம்" என்றும் ஜனாதிபதிரிற்றோ கூறலாயினர். ஆனால், அவர் 1946-ம் ஆண்டு சிறைவைக்கப் பட்டவரும், 1951-ம்ஆண்டுமுதல் வீட்டுக்காவலின்கீழ் இருந்துவருகிறவருமான சாகிறெப்நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினால் ஸ்ரிபினக் ஆண்டவரைப்பற்றி யாதாமொன்றுமே சொல்லவில்லை.

## லிவர்ப்பூல் நகர் ஆசனக் கோவில்

பரிமாணத்திலே றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்துக்குப்பின் உலகில் மிகப்பிரமாண்டமானதாய், லிவர்ப்பூல் துறைமுகத்துக்கு மேலாக உயர்ந்தோங்கிக் காட்சியளிக்கக்கூடியதாய்க் கிறீஸ்து இராசாபேரால் ஓர்புதிய ஆசனக் கோவிலைக் கட்டியெழுப்புவதற்குத் திட்டமிட்டு அப்போது திருப்பணி ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், 1957-ம்ஆண்டுலிவர்ப்பூல் நகர் அதிமேற்றிராணியாராக ஹீனன்ஆண்டவர் நியமனம் பெற்றபோது, முந்தியதிட்டப்படி கோவிலைக் கட்டியெழுப்புகிறதானால் அதிகசெலவு பிடிக்குமென்றும், கட்டிமுடிக்க நீண்டகாலம் எடுக்குமென்றும்கூறி, "நம்முடைய காலத்திலேயே" கட்டியெழுப்பக்கூடிய ஓர்ஆசனக்கோவிலுக்கு வகைசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனால் இந்தஆசனக்கோவில் இப்போது பத்துலட்சம் பவுண் செலவிலே குறுகியகாலத்தில் கட்டியெழுப்பப்பட விருக்கிறது. இதற்கான மாதிரிப்படங்கள் வரைதற்கென்று கட்டடகிர்மாண கலைஞர்களிடையே போட்டியொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதற்தரமான மூன்றுமாதிரிப் படங்களுக்கும் முறையே 5,000, 3,000, 2,000 பவுணாகமொத்தம் 10,000 பவுண் பரிசில்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்போட்டியிலே கலந்துகொள்வாருக்கெல்லாம் ஹீனன் அதிமேற்றிராணியார் அனுப்பிய திருமுகம்ஒன்றிலே, "கிறீஸ்துஇராசாவின் திருநாமத்துக்கு உகந்ததான ஓர்ஆசனக் கோவிலைக் கட்டியெழுப்பத்தக்கதாய் அவர்உங்களுக்கு நல்லேவுதலை உண்டுபண்ணுவாராக" எனத் தெரிவித்திருக்கின்றார்.

புதிய மாதிரிப்படத்தின்படி புதியஆசனக்கோவில் 3,000 பேருக்கும், அதில்அடங்கிய திவ்விய நற்கருணைச் சின்னக்கோவில் 200 பேருக்கும், தேவமாதாவின் சின்னக்கோவில் 100 பேருக்கும் போதிய ஆசனவசதிகளைக் கொண்டதாயும், சிறியசின்னக் கோவில்களிலே பக்கப்பலிபீடங்கள் எட்டைக்கொண்டதாயும் இருந்துவரும்.

—✻—

## மனந்திரும்பிய சினிமா நடிகை

மெக்சிக்கோநாட்டின் பிரபல சினிமாநடிகையும், நடனமாதுவுமான 26 வயதுடைய செல்வி குளோறியா மெஸ்றேஎன்ற பெண்மணி சமீபத்திலே றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தைத் தரிசித்தபின் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளலானாள். மெக்சிக்கோபட்டினத்தில்வசிக்கும் இப்பெண்மணி அம்மகாதேவாலயத்தில் பாவசங்கீர்த்தனம்கேட்கும் குருப்பிரசாதிகளில்ஒருவரான வண. மார்க்கோ ஸ்ரீபானேசுவாமியாரால் ஞானஸ்நானம் அருளப்பட்டுப் பின்னர் அம்மகாதேவாலய கனன்களில் ஒருவரான ஜோண் சிமிற் மேற்றிராணியாரால் உறுதிப்பூசுதல் செய்யப்பெற்றாள்.

இவள் அம்மகாதேவாலயத்தைத் தரிசித்தபின் தனதுஉள்ளத்தில்எழுந்த மனவருட்சி காரணமாக ஸ்பானியபாஷையில் பாவசங்கீர்த்தனம் கேட்டுக்கொண்டிருந்த ஓர்குருவானவரிடம்சென்று அவருடைய ஆசீர்வாதத்தை வேண்டிநின்றாள். வண. ஸ்ரிபானோஎன்ற இந்தக் குருவானவர் அவளுடைய மனப்போக்கை அறிந்துகொண்டு அவள் கத்தோலிக்க வேதசத்தியங்களைப் படித்தறிவதில் கரிசனையெடுக்க வேண்டுமென்று ஆலோசனைகூறினார். அவளும் அவ்வாறேசெய்து மனந்திரும்பினாள்.

இவள் கத்தறின் டன்ஹாமின் நடனகுழுவுடன் ஓர்நடனவிருந்தாடியாய் ஐரோப்பியநாடுகளில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு றோமாபுரி சென்றிருந்தாள். இதுவரை சுமார் 25சினிமாப்படங்களிலே இவள் நடித்திருக்கிறாள். மெக்சிக்கோ "ரெலிவிஷ"னிலும்இவள் தோற்றியிருக்கிறாள்.

—✻—

## நன்கொடையாக அருளப்பட்டுள்ள அங்கிளிக்கன்சபைக் கோவில்

அயர்லாந்திலே பலினுஹிஞ்ச் பட்டினத்தில் இருந்துவந்த அங்கிளிக்கன் சபைக் கோவிலானது அங்குள்ள கத்தோலிக்கசமூகத்துக்கு ஒருநன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது. பலினுஹிஞ்ச் பட்டினத்தில் அநேக வருடங்களாக அங்கிளிக்கன் சபைக் கிறீஸ்தவர்கள் வசித்திராதகாரணமாக அயர்லாந்திலுள்ள அங்கிளிக்கன்சபைப்பிரதிநிதிகள்சங்கம்கூடிஆலோசித்தே இந்தமுடிவைச் செய்யலாயிற்று. "பலினுஹிஞ்சின் அயலிலே கத்தோலிக்[illegible]மேயில்லை; [illegible] தோலிக்க சமூகத்தைச்சேர்ந்த அநேகமக்கள் தங்களுக்கு அதிகம்சமீபமாகவுள்ள கோவிலுக்குப்போகப் பிரதானமாய் மலைவீதிகளைக்கடந்து நெடுந்தூரம் பிரயாணஞ்செய்ய வேண்டியிருக்கிறார்கள்; அதனால் பலினுஹிஞ்சிலுள்ள அங்கிளிக்கன்சபைக் கோவிலை இடிப்பதற்குப் பதில் அப்பகுதியிலுள்ள கத்தோலிக்கரின் ஆராதனைவழிபாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யுமுகமாக அதனை நன்கொடையாக அவர்[illegible] கொடுப்பது நன்று" [illegible] சங்கம்தீர்மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜப்பானியரான முதல் மேற்றிராணியார்

நாகாஸகிநகரின் முன்னாள் மேற்றிராணியாரும், கத்தோலிக்க மேற்றிராணியாராய்வந்த முதலாவது ஜப்பானியருமான ஜனுவாரியஸ் ஹயாஸாகா ஆண்டவர் தமது 76-ம்வயதிலே சமீபத்தில் காலஞ்செல்லலாயினர். இவர் 1927-ம்ஆண்டு ஐப்பசி மாதம் 30-ந்திகதியன்று அர்ச். பேதுருவானவர்மகாதேவாலயத்தில் 11-ம்பத்திநாத பாப்பானவரால்மேற்றிராணித்துவஅபிஷேகஞ் செய்யப்பெற்றிருந்தார். இவர் நாகாஸகிநகரின் ஐந்தாவது மேற்றிராணியார். ஜப்பானில் மிகப்பெரியமேற்றிராசனம் நாகாஸகிமேற்றிராசனமே. ஏறக்குறைய மூன்றுநூற்றாண்டுகளாக வேதகலாபனை நடந்தும் வேதவிசுவாசத்தைக் கைவிடாமல் பாதுகாத்துள்ள புராதனகத்தோலிக்கமத்தியஸ்தானம் இதுவாகும். இவர் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் மேற்றிராணித்துவஅபிஷேகம் செய்யப்பெற்றபோது15கருதினால்மாரும், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்அநேகரும், இருபதினாயிரம்பக்தர்களும் அங்கு பிரசன்னமாயிருந்து ஜப்பானிய முதல் மேற்றிராணியாரான இவரைக் கௌரவித்தார்கள்.

---

### ஞானஸ்நானம் பெறுவதற்காக 8,000 மைல் தூரப்பிரயாணம்

ஐக்கிய அமெரிக்கதேச சென்லூயிஸ்நகர் வாசியான திரு. வால்ற்றர்ஹெறபெனிச்அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்காகச் சமீபத்திலே அங்கிருந்து 8,000மைல்தூரம் பிரயாணஞ்செய்து ஜப்பானியதேச கியோற்றோநகர் போய்ச்சேரலாயினர். இந்நகரிலுள்ள அவர்புதல்வரும், மறிநோல்சபை மிஷனரியுமான வண. ஜேம்ஸ் ஹெறபெனிச்சுவாமியார் அங்கு தாம் விசாரணைசெய்யும் திருக்குடும்பப் பங்குக்கோவிலிலே அவருடைய விசுவாச அறிக்கையைஏற்று அவருக்கு ஞானஸ்நானம் அருளலாயினர். ஜப்பானிலே ஓர்மிஷனரியாகக் கடந்த பத்துவருடங்களிலும் தொண்டாற்றிய சுவாமியாருக்கு அவர் தந்தையாரின் இந்தமனந்திரும்புதல் ஒருபெரும் வெற்றியாயிருந்தது. ஏற்கனவே மனந்திரும்பிய சுவாமியாரின் தாயாரும் அவர்தந்தையாருடன் அங்கு சென்றிருந்தார். இருவரும் முதன்முதலாக அவர்கரத்தால் ஒருங்கே திவ்வியநன்மையும் பெற்றுக்கொண்டனர். அவ்விசாரணைப் பங்கைச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் தங்கள்தரிசகர்களைத் தங்களது பாரம்பரியமான நடனங்களாலும், ஓர்நாடகத்தாலும் நல்வரவேற்றார்கள்.

---

● 12-ம்பத்திநாதபாப்பானவர் அந்தியநோய்கண்டிருந்தபோது அவருக்குச்சிகிச்சைசெய்த வைத்தியநிபுணர்களில் ஒருவரான டக்றர்அன்ரோனியோ காஸ்பாறினி அவர்கள் சுகாதாரத்துறையில் சாதித்துள்ள அருஞ்சாதனைகளைப்பாராட்டி இத்தாலியஅரசாங்கம் அவருக்குத் தங்கப்பதக்கம்ஒன்று சன்மானித்திருக்கிறது.

## திருநாள் அட்டவணை

**தை — 1960**

ஞா 31 பிரத்தியட்சத்தின் பின் 4-ம் ஞாயிறு—அர்ச். டொன் பொஸ்கோ—பாலர் சபைத்தினம் (ப)

**மாசி — 1960**

திங். 1 அர்ச். இஞ்ஞாசியார், மே. (சி)
செ. 2 தேவமாதாவின் சுத்திகரத் திருநாள் விசு. மங். 2-ம் வ. (வெ)
புத. 3 காலதினம்—பிரத்தியட்சத்தின் பின் 4-ம் ஞாயிறுப் பூசை விசு. மந்திரம் (ப)
வி. 4 இலங்கைநாயகி திருநாள் விசு. மங். 1-ம் வகுப்பு (வெ)
வெ. 5 அர்ச். ஆகத்தம்மாள், க. வே. முதல்வெள்ளி (சி)
சனி 6 அர்ச். தீத்தூசப்பர், மே. (வெ)

சத்திய வேத
பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
தைமாதம் 28-ந் திகதி

## வினைவிதைத்தவன் வினையறுப்பான்

முந்தியபொதுத்தேர்தலிலே எம். ஈ. பி. என்றுதனக்குநாமஞ்சூட்டிக்கொண்ட மக்கள்ஐக்கிய முன்னணிக்கட்சி வெற்றியீட்டியதும்மெய். அதனால் திரு. பண்டாரநாயகாபிரதமராகவந்ததும்மெய். அவர் இந்தமுன்னணிப் பிரதமராயிருந்து ஆட்சிநடத்திய மூன்றுவருடகாலத்திலும் மொழிப்பிரச்சினைமுதலாம் பல்வேறு பிரச்சினைகளாலே இலங்கையிலுள்ள பல்வேறுசாகியங்கள், சமூகங்களை இரண்டுபடுத்தியதும்மெய். அவைகளிடையே பண்டுதொட்டு இருந்துவந்த ஐக்கியத்தையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் பங்கப்படுத்தியதும்மெய். அதனால் பயங்கர வகுப்புவாதக் கலகமுண்டாய்ப் பல்லுயிர்கள் மடிந்ததும்மெய். பல்லாயிரவர் தங்கள் உயிருக்குப் பயந்து வாழ்ந்தமனைகளை— வசித்திருந்த நகர்கள், கிராமங்களை விட்டு வலசைவாங்கியதும்மெய். போதாக்குறைக்குப்பொங்கரும் என்றவாறாய்ப் பொல்லாத வெள்ளப்பிரவாகமுண்டாய் உயிர்களை வாட்டியதும்மெய்.

இத்தகைய திருவிளையாடல்கள் பலவற்றால்பெயர்வாங்கிய மக்கள் ஐக்கியமுன்னணியிலிருந்து திரு. பிலிப் குணவர்த்தனா தனது கோஷ்டியாருடன் பின்வாங்கிய போதே அந்தமுன்னணிகுலைந்து, கட்சியுமின்றவிடமேதெரியாது நிலைகுலைந்து, அதன்மேல் ஐக்கிய முன்னணிக்கட்சிப் பிரதமர்பண்டாரநாயகா பழைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரதமரானதும்மெய். ஆனால், இவர் படுகொலைசெய்யப்பட்டதும் அவரிடமாகவந்த பிரதமர்தஹநாயகாவின் திடீர்நிகழ்ச்சிகளில்ஒன்றாய்ப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும்மெய். அதன்விளைவாய் இன்று காளான்களைப்போன்று அரசியல்கட்சிகள்பல முளைத்திருப்பதும்மெய். இவற்றுடன் கலைந்து, உருக்குலைந்து, சிதைந்துபோன ஐக்கியமுன்னணிக்கட்சி (எம். ஈ. பி.)மீண்டும் உருப்பெற்றிருப்பதும்மெய். இதற்குப் புத்துருவும், புத்துயிரும் அளித்து, இப்போது தலைமை தாங்கி இருப்பவர்யார்? "புரட்சியின்தந்தை"யும், மக்கள்ஐக்கிய முன்னணியை அன்றுபுரட்டிய தீரனும், இன்று புத்ததொண்டனாகத்தன்னைக் காட்டிக்கொள்ளும் வீரனுமான திரு. பிலிப் குணவர்த்தனாதான்.

மக்களென்றால் — ஐக்கியமென்றால்—முன்னணியென்றால் — மக்கள்ஐக்கியமுன்னணியென்றால் மக்களெல்லாம் மருண்டுவிடுவார்களென்று கனவுகாண்கிறார் திரு. பிலிப் குணவர்த்தனா. ஆனால்,அவர் தனதுசெயலால் மக்களின் ஐக்கியத்தைக்குலைத்து எம் ஈ. பி. ஆட்சிகால பயங்கர விளைவுகளைத் திரும்பவும் உண்டுபண்ணிவிடுவாரோ என்றுதான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. இப்போதுஅவர் தனதுதேர்தல் பிரசாரகூட்டங்களில் முன்போலக் கத்தோலிக்கதிருச்சபையை இழுத்து, அதன்மேல் தான்நினைத்தபடியெல்லாம் குற்றஞ்சுமத்த முற்பட்டிருக்கிறார். ஐக்கியதேசியகட்சிக்கும், பிரதமர்தஹநாயகா கட்சிக்கும் கத்தோலிக்கதிருச்சபை பணஉதவிசெய்து வருகிறதென்றும், ஏனெனில், அவ்விருகட்சிகளும் உதவிப்பணம்பெறும் பாடசாலைகளைத் தாங்கள் எடுக்கப்போவதில்லையென்று வாக்குறுதியளித்திருக்கின்றனவென்றும் அவர்கூறிவருகின்றார். ஆனால், இந்தக்கட்சிகளுக்கோ, அன்றேல் வேறெந்தக் கட்சிகளுக்கோ கத்தோலிக்கதிருச்சபை பணவுதவிசெய்திருப்பதாக அத்தாட்சிப்படுத்துமாறு அவருக்கோ அன்றேல் அவருக்குப் பந்தம்பிடிப்பவருக்கோ விடுத்திருக்கும் சவாலுக்கு முந்தியமுந்திய முறைகளில்போன்று பெட்டிப்பாம்புபோல இவர்கள் வாய்பொத்திக் கொண்டிராது புரட்டுருட்டில்லாது, பதிலளிப்பார்களா?

திரு. பிலிப் குணவர்த்தனா இவ்விதம் கத்தோலிக்கதிருச்சபையைத் தாக்குவதிலும், அதன்மேல் குற்றஞ்சாட்டுவதிலும் அவர்கடைப்பிடிக்கும் தந்திரம் ஒன்று இல்லாமலில்லை. அதனை நாமாகவெளியிடாது பிரதமர் தஹநாயகா வாயிலாகவே வெளியிடுகின்றோம். அவிசாவலையிலே சென்றஞாயிறுவாரம் நடைபெற்ற தேர்தல்பிரசார கூட்டம் ஒன்றில் அவர்பேசியபோது: "இந்தநாட்டிலே மதக்கலகங்களை உண்டுபண்ணமுயலும் ஆசாமி திரு. பிலிப் குணவர்த்தனாதான்; அவர் இப்போது புத்தர்களையும், கத்தோலிக்கரையும் ஒருவர் மீதொருவர் மோதும்படியாக நாட்டில்பிரசாரம் நடத்திக் கொண்டுதிரிகிறார்; மதக்கலவரங்களைத் தூண்டிவிடும் திரு. பிலிப் குணவர்த்தனா போன்றவர்களிடமிருந்து நாட்டைப்பாதுகாக்கும்பொருட்டுத்தான் உள்நாட்டுப் பந்தோபஸ்து மந்திரி காரியாலயம்ஒன்றைச் சிருட்டித்தேன்"என்று பிரசித்தமாகக்கூறியிருக்கின்றார். சாடிக்குமூடி வாய்த்தாற்போல் திரு. மெத்தானந்தாவும், திரு. பிலிப் குணவர்த்தனாவுடன்கூடி இவரின்தாளத்துக்கு நடிப்பார்போல் தன்னைக் காட்டிக்கொள்ளுகின்றார். இவர்கள் விதைக்கும்குரோதவித்துகள் முளைத்தெழுமானால் 1958-ம் ஆண்டிலும்கூடிய பயங்கர அனர்த்தங்களையே விளைக்குமென்று சொல்லவேண்டியதில்லை. ஆனால், வினைவிதைத்தவன் வினையறுப்பான்

## கேரள இராச்சிய தேர்தல்

இந்தியஜனாதிபதி விடுத்த ஆணையின்பேரிலே சென்றஆடிமாதம் கம்யூனிஸ்த ஆட்சியிலிருந்து கைபறிந்துபோன கேரள இராச்சிய சட்டசபை இடைக்கால்தேர்தல் மாசிமாதம்1-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை நடந்தேறவிருக்கிறது. சபையின் 126ஸ்தானங்களுக்கும் 312 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். தேர்தல் அண்மியதாலே கட்சிகளின் தேர்தல்பிரசாரம் உச்சநிலை அடைந்துள்ளது. இந்தத்தேர்தல் கேரளத்தின்நியமத்தை— அதாவது ஜனநாயகமா அன்றேல் கம்யூனிஸ்த சர்வாதிகாரமாஎன்பதை நிச்சயிப்பதாகும். ஆகவே, அகில முழுவதினதும் கவனத்தை இது கவர்ந்திருக்கிறது.

கேரளதேர்தலில் இந்தியகாங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்த், முஸ்லீம்லீக்காகிய கட்சிகள்மூன்றினதும் கூட்டணி ஒருபுறத்திலும், கம்யூனிஸ்தகட்சி மறுபுறத்திலும் ஆட்சியைக்கைப்பற்றமுனைந்து மிகவும்முரமாக வேலைசெய்துவருகின்றன. இந்தியபிரதமர் நேருஅவர்கள் சமீபத்திலே கேரளத்திற்கு விஜயஞ்செய்து பிரசாரகூட்டம் ஒன்றில் பேசியபோது, "நாட்டின்முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைபோடுமகொள்கையை இந்தியகம்யூனிஸ்தர்கள் கடைப்பிடிக்கின்றார்கள்; அவர்களின் போக்கு பலாத்காரத்துக்கு அடிகோலுவதாய்உள்ளது; கம்யூனிஸ்தர்களின் பேச்சுகளில் தீவிரம்தொனித்தபோதிலும் சிந்தனையில்அவர்கள் பிற்போக்காளராகவே இருக்கிறார்கள். நூறுவருடங்களுககுமுன் இருந்த நிலையை அடிப்படையாகக் கொண்டுதான் அவர்கள்விஷயங்களைச் சிந்திக்கின்றார்கள்; இந்தியகம்யூனிஸ்தகட்சி தேசிய உணர்ச்சியையோ, நாட்டுமக்களின் அபிலாஷைகளையோ கிஞ்சித்தும் கருத்தில்கொள்ளாத ஓர்பிற்போக்கானகட்சி"யெனக் கூறி அதனைக் காரசாரமாகத் தாக்கினார்.

இந்தியகாங்கிரஸ்தலைவர் திரு. என். சஞ்சீவிரெட்டி அவர்கள் விடுத்த கடுமையானஎச்சரிக்கையிலே, "தேசத்தை வெளிநாட்டினருக்குக் காட்டிக்கொடுக்கக் கம்யூனிஸ்தர்கள் முயன்றால் நாற்பதுகோடி இந்தியமக்களும் பந்தெனத்திரண்டு அந்தவெளிநாட்டினரையும், அவர்களின் கையாட்களான இந்தியகம்யூனிஸ்தர்களையும் வேருடன் களைந்து துவம்சம்செய்துவிடுவார்கள்; சீனப்படைவீரர்களை விடுதலைவீரர்களென்று இந்திய கம்யூனிஸ்தர்கள் எண்ணுகிறார்கள்; இவர்களின் எண்ணம் தகர்த்தெறியப்படும்; கம்யூனிஸ்த அபேட்சகர்ஒருவருக்குப் போடப்படும் ஒவ்வொருவாக்கும் இந்தியாவின் எல்லைப்புறத்திலே சீனரின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவான வாக்காகவிருக்கும்; நமது நாட்டுக்குச் சொந்தமாயுள்ள பல ஆயிரக்கணக்கான சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தைச் சீனர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும் இந்தியகம்யூனிஸ்தர்கள் இதனை ஆக்கிரமிப்பென்றுகூற மறுக்கிறார்கள்; உண்மையிலே பிறகம்யூனிஸ்த நாடுகளின் ஆதரவில்லாமல் இந்தியகம்யூனிஸ்தர்கள் வாழமுடியாது; ஆகவே, கம்யூனிஸ்த ஆபத்திலிருந்து நாட்டைக்காப்பாற்ற வேண்டியபொறுப்பு இந்தியமக்களைச்சார்ந்தது; கேரளத்திலே கம்யூனிஸ்தர்கள் மீண்டும் அதிகாரத்துக்குவந்தால் அதனால்நாடுமுழுவதுக்கும் பேராபாயம்ஏற்படுவதாகும்" எனக் கூறியிருக்கின்றார்.

கேரளதேர்தல் நெருங்கநெருங்கப் பலாத்காரச்செயல்களும் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும், தேர்தலிலே கம்யூனிஸ்தர்கள் தங்கள் சொந்தக்கட்சிப் பணத்தை மாத்திரமல்ல, சர்வதேச கம்யூனிஸ்தகட்சி சிங்கப்பூர்முதலாம் இடங்களிலிருந்து இலட்சக்கணக்கிலே களவாக அனுப்பிவைக்கும் ரூபாக்களையும் பயன்படுத்திவருவதாகவும் தெரியவருகிறது. இந்தத்தேர்தலிலே கம்யூனிஸ்தர்களை முறியடிக்குமிடத்துத்தான் அங்கு கம்யூனிஸ்தஆட்சியை எதிர்த்து நடைபெற்றபோராட்டம் நியாயமானதுஎன்பதைக் கேரளமக்கள் நிச்சயப்படுத்துவார்கள். இலங்கையிலும் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது நாட்டுவாக்காளரும் மேற்கூறியவற்றைச் சிந்தித்தல் நலமாகும்என்க.

### மாதம் 36,000 முட்டைகள்

கல்லோயாவிலுள்ள கோழிப்பண்ணைகளிலிருந்து தற்போது மாதவீதம் 36,000 முட்டைகள் கிடைக்கின்றன. இவற்றிலே 20,000 முட்டைகளை விற்பனவுப்பகுதி விலைகொடுத்து வாங்கிக் கொழும்பிலே விற்பனை செய்கின்றது. கொழும்பிலுள்ள கல்லோயாச்சபைக் காரியாலயம் 5,000 முட்டைகளைவாங்கித் தனது ஊழியர்களுக்கு விற்பனை செய்கின்றது. மீதியான 11,000 முட்டைகளில் பெரும்பாலானவை குஞ்சுபொரிக்க வைக்கப்படுகின்றன. விரைவிலே் கல்லோயாக் கோழிக்குஞ்சுகள் கொழும்பிலே விற்பனைசெய்யப்படுமென்று சொல்லப்படுகிறது.

### பஸ்களும் மேலதிக பிரயாணிகளும்

45 பிரயாணிகளையே ஏற்றிச்செல்ல வேண்டிய யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவைச்சேர்ந்த இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்ஒன்று 78 பிரயாணிகளை — அதாவது கூடுதலாக 33 பிரயாணிகளை ஏற்றிச்சென்று கண்டுபிடிக்கப்படலாயிற்று. அதன்பேரில் அந்தப் பஸ் கண்டக்றரான கந்தையா செல்லையாமீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 75 ரூபா அபராதம் விதிக்கலாயினர்.

### றெயின்விபத்தில் இழந்தநகைகள்

சமீபத்தில்நடைபெற்ற வவுனியா றெயின்விபத்தின்போது இழந்தநகைகளை அடையாளம்காண்பிக்கும்படி அவைகளை இழந்தவர்கள் வவுனியாப் பொலிஸரால் கேட்கப்பட்டுள்ளனர். சந்தேகிக்கப்படும் சிலரிடமிருந்து பொலிஸர் ஏராளமான நகைகளையும், புடவைகளையும் கைப்பற்றியிருக்கின்றனர். இவைகளை வழக்குவிசாரணை ஆரம்பமாகும் தினமன்று அவர்கள் நீதிஸ்தலத்தில் சமர்ப்பிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை

## அட்சர, கேத்திர கணிதம்

ஆறும் வகுப்புக்குரியது

ஆக்கியோர்: ஆசிரியர்கள். தோமஸ் ஈப்பென், B, Sc, ஆர். சோமசுந்தரம், திருஇருதயகல்லூரி.
பிரசுரம்: சிறியபுஷ்ப புத்தகசாலை, கரவெட்டி.
பதிப்பகம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்.
விலை: பிரதி ரூபா 1. சதம் 50.

அட்சரகணிதம், கேத்திரகணிதமாகிய இரண்டினையும் ஒருங்கே அடக்கியதாய் ஆறும்வகுப்புக்கென்று நவமாக வெளிவந்துள்ள "அட்சர கேத்திரகணிதம்" எனும்நூல் தரப்பெற்றேம். இதனை ஆக்கியோரான இருவரும் ஆசிரியர்களும், மாணவர்களுமாகிய இருபாலாருமே அதிகம்பயன்பெறத்தகுந்த வகையிலே அட்சரகணிதம், கேத்திரகணிதமாகிய இருகணிதங்களையும் ஒன்றுசேர்த்து ஒரேநூலாகவெளியிட்டிருப்பது அதிகம்பொருத்தமானதே. முதல்வருடத்திலேயே மாணவருக்குக் கேத்திரகணிதத்தை உகந்தமுறையிலே அறிமுகப்படுத்திப் பெரிதும் ஆர்வத்தைப் பிறப்பிக்குமுகமாக இந்நூலில் முதலிடம்வகித்திருப்பது கேத்திரகணிதமே. கோடு, புள்ளி, கோணம்ஆதியவைகளை மாணவர் இலகுவில் புரிந்துகொள்ளவும், அடிமட்டம், பாகைமானி, வட்டாரி ஆதியாங்கருவிகளை அவர்கள் திறம்படக் கையாளவுமாகப் பலவிதகவர்ச்சிகரமான படங்கள் மூலம் விளக்கம்தரப்பட்டிருப்பது இந்நூலின் ஓர்விசேட அம்சமாகும்.

இதிலே இரண்டாவதுஇடம் வகித்திருப்பது அட்சரகணிதம். இதில்ஆரம்பமுதலே எண்கணிதவாயிலாக அட்சரகணிதத்தைப் பயிற்றும்வகையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளமுறையும், அட்சரகணிதவிதிகளை ஆராய்ந்து விளங்கவைத்துள்ளமுறையும் பாராட்டத்தக்கனவாகும். உதாரணங்கள் பல தரப்பட்டனவாயும், படிமுறைப்பட்டனவாயும், பயிற்சிகள் தரப்படுத்தப்பட்டனவாயும் அமைந்திருப்பதுடன் பொருத்தமான இடங்களில் மீட்டற்பயிற்சிகளும், ஈற்றில் வினுப்பத்திரங்கள், விடைகளும் தரப்பட்டுமிருக்கின்றன. அட்சர, கேத்திரகணிதங்கள் பயிற்றுவதிலே தமக்குள்ள நெடுங்கால ஆற்றலையும், அனுபவத்தையும் மேற்கொண்டு மாணவர்க்கு இலகுவில் புலப்படக்கூடிய சுலபமானவிதிகளைக் கையாண்டு ஆசிரியர்கள்இருவர்கள் அரும்பெரும் முயற்சியெடுத்துக் கவர்ச்சிகரமாய் வெளியிட்டுள்ள இந்த அட்சரகேத்திரகணிதத்தை ஆசிரிய, மாணவஉலகம் மனமுவந்துவரவேற்றுப் பெரும்பயன் அடையுமென்றே நம்புகின்றேம். நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

● பரமபதம்அடைந்தவரான 12-ம் பத்திநாத பாப்பானவருக்கு முத்திப் பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணையைத் தொடக்கவேண்டுமென்றுகேட்டுக் கத்தோலிக்கடக்றர்மாரின் இத்தாலிய தேசியசங்கம் அருளப்பபாப்பரசருக்கு மனுப்பண்ணியிருக்கிறது. இந்தமனுப்பத்திரத்தில் அச்சங்கத்தின் தலைவரான டக்றர் லூய்ஜி ஜெட்டா அவர்கள் கைச்சாத்திட்டிருக்கின்றார்.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள கிழக்குஜேர்மனியைச்சேர்ந்த சுவேறின் நகரில் கத்தோலிக்கருக்கெனக் கம்யூனிஸ்தஆதரவில் ஓர்சமாதான அணிவகுப்புசமீபத்தில் நடத்தப்பட்டபோது அதற்கு 70பேர்மாத்திரமே சமுகமளித்திருந்தார்கள். சுவேறின் நகர்ப்பகுதியில் சுமார்1லட்சத்து 20 ஆயிரம்கத்தோலிக்கர் இருந்துவருகிறார்கள்.

## வீரப்பெண்மணி அன்ட்றீ

அன்ட்றீ ஓர்இளம்சீனப்பெண்பிள்ளை. மரியாயின்சேனையிலே ஓர்அங்கத்தவள். 1951-ம்ஆண்டு கம்யூனிஸ்தபொலிஸர் அவளைக் கைதுசெய்து பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுசென்று, மரியாயின் சேனையைப்பற்றி இல்லாதபொல்லாத பயங்கர படுபொய்களையெல்லாம் அவளிடம் கூறினர்கள். மரியாயின்சேனை என்பது ஓர்இராணுவ முஸ்திப்பு, வேவுகாரர்குழாம் என்றெல்லாம் அபாண்டமாகச் சொல்லப்பட்டது. அப்பெண்பிள்ளை அவர்கள்கூறியதைச் செவிகொடுத்து அமைதியாகக்கேட்டாள். யாதொன்றும் சொல்லவில்லை.

அடுத்தபடியாகப் பொலிஸ் அதிகாரி அங்கு கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவந்த ஓர் கத்தோலிக்க அநாதசாலையைப் பற்றி அவளிடம் கூறினன். இதைக்கேட்டதும் அவளுடைய வதனம் சந்தோஷத்தினுல் பூரித்து மலரத்தொடங்கியது. இதனைக்கண்ணுற்ற பொலிஸ்அதிகாரி உற்சாகமடைந்தவனுய்,

"இந்தக்கத்தோலிக்க கன்னியாஸ்திரிமார் அநாதபிள்ளைகளை அடிக்கிறவர்கள்என்பது உனக்குத்தெரியும்அல்லவா? அதுமட்டுமல்ல, ஆனுல், அவர்கள் பலமுறைகளிலும் பிள்ளைகளைப் பசிபட்டினியால் சாகவிடுகிறுர்கள்; உயிரோடு அவர்களைப் புதைத்துத்தானும் இருக்கிறுர்கள் அல்லவா?"

பின்புஅவன் தான்சொன்னவைகள் அவள்மனதில் நன்றுய்ப் பதியும்படியாகச் சிறிதுவேளை தாமதித்து, மிகவும் பரிதாபப்படுவான்போல் நடித்து, "இப்போதுசொல், இவைகள் எல்லாவற்றையும்பற்றி நீ என்னநினைக்கிருய்?"

அப்போது அன்ட்றீ அவனை விழித்து, "இப்போதுநான் உங்களிடம் சிலகேள்விகள் கேட்கலாமா" என்று பதிலளித்தாள்.

"ஆஹா! தடையின்றிக் கேட்கலாம்."

"நான் நல்லசுகபல தோற்றமுடையவளாய்க் காணப்படுகிறேனு?"

"ஆம், உள்ளபடியே நீ அதிகம்நல்ல சுகபலத்துடன் இருக்கக் காணப்படுகிருய்" என்றுன் பொலிஸ்அதிகாரி.

"நான் நியாயமான நல்லமாதிரியாய் உடைதரித்திருக்கிறேனு?"

"அதிகம் சிறந்தமாதிரியாய் உடைதரித்திருக்கிருய்."

"நான் சிறந்தசீனப்பாஷை பேசுகின்றேனு?"

"நான் பேசுவதைப்போல் சிறந்த சீனப்பாஷைபேசுகிருய்; ஆம், மிகச்சிறந்தபாஷை பேசுகிருய்."

"அத்துடன் நான்பிரான்ஸிய, ஆங்கிலபாஷைகளும் பேசுகிறேன்" என்றுவிட்டுப் பின்னரும் அவள்தொடர்ந்து, "நான் உங்களுக்கு இரண்டொருகாரியம் இப்போது சொல்லலாமா?"

"தயங்காமல் சொல்லலாம்"

"என் தகப்பனுர் நான் ஓர் குழந்தையாய் இருந்தபோது இறந்துபோயினுர். என்னைப் போஷித்துவளர்க்கும்படியாக மிகவும்வறிய என்னுடையதாய் நீங்கள் சுட்டிப்பேசுகின்ற அதே அநாதசாலையில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டாள். அங்குதான் நான்வளர்ந்தேன். எனக்குள்ள நல்ல சுகபலத்தையிட்டு அத்துணை நன்றுய், கவனமாய்என்னைவளர்த்தகன்னியாஸ்திரிமாருக்கு நான்கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள்கண்டு அதிசயப்படுகின்ற இந்தஉடைகளைக் கன்னியாஸ்திரிமாரே எனக்குக்கொடுத்தார்கள். நான் வாசாலமாகப் பேசுகின்ற சீனப்பாஷையை அவர்களேஎனக்குப் படிப்பித்தார்கள். இவற்றிற்காகவும் நான் அவர்களுக்குப் பெரும் நன்றியுள்ளவளாய் இருக்கிறேன். அதனுல் ஐயா! கன்னியாஸ்திரிமார் எவ்வாறு அநாதபிள்ளைகளைக் கொடுமையாய் நடத்துகிறுர்களென்று நீங்கள் எனக்குச் சொல்வதைக் கேட்க நான்மிகவும் கவலைப்படுகிறேன்"

இன்று அன்ட்றீஎன்ற இந்தப் பெண்பிள்ளை எங்கே? சிறையிலா, அன்றேல் தொழில்முகாமிலா? எங்கேயென்று எவருமே அறியமாட்டார்கள். ஆனுல், இரண்டினுள் ஒன்றில்என்பது நிச்சயம்.

கம்யூனிஸ்தசீனுவிலே இவளைப் போலும் தங்கள் திருவேதத்தில் வீரத்துவபிரமாணிக்க முள்ளவர்களாய், அதற்காகத் துன்பப்படுகிறவர்களாய் ஆயிரக்கணக்கான அன்ட்றீக்கள் இருக்கிறுர்கள். இப்போது நாம் அவர்களுக்குச் செய்யக்கூடியதெல்லாம் செபம்தான். அதனுல் இதனை வாசிக்கிற உங்கள்ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்வது, இவ்விதம் துன்புற்றுவாடுகின்ற சீனக் கத்தோலிக்கமக்களை உங்கள்செபங்களில் தினமும் நினைவுகூர வேண்டுமென்பதே.

---

● சோவியற்ருஷியாவிலே சமயத்தைஎதிர்த்துப் புதியபோராட்டமொன்றைப் 'பிருவ்டா' என்ற கம்யூனிஸ்ததினவர்த்தமானி தொடக்கியிருப்பதாகப் பேர்ளின்நகரிலே செய்திகிடைத்திருக்கிறது. சமயத்தை விஞ்ஞானத்துடன் ஒருமைப்படுத்திக் கம்யூனிஸம் சமயத்துடன் உடனிருந்துவாழமுடியுமென்று மக்களுக்குஉணர்த்தக் குருமார் முயற்சிக்கின்றனரென்று அப்பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

● அர்ச். வின்சென்ற் டீபோலின் மூன்றும்நூற்றுண்டுவிழா ஆரம்பவைபவத்தின்போது அவரதுவாழ்க்கையினதும், தொண்டினதும் வரலாற்றைத் தெரிவிக்கும் சினிமாப்படம்ஒன்று பரீஸ்நகரில் காண்பிக்கப்படவிருக்கிறது. இந்தச்சினிமாப்படம் மார்சேல்ஸ் நகரின் லல்ரியர்அதிமேற்றிராணியாரது சகோதரரான எற்றியென் லல்ரியர், ஜீன் மரியேமாசெல்என்பவர்களை வழிகாட்டிகளாகக்கொண்டு தற்போது பிரான்ஸிலே தயாரிக்கப்பட்டுவருகிறது.

● வத்திக்கானின் அதிவிருத்தாப்பிய குருசிரேஷ்டரும், திருச்சடங்காசார திருச்சங்கத்தின் செயலாளருமான அல்போன்ஸோ கறின்சி அதிமேற்றிராணியார் சமீபத்திலே தமது 97-வதுபிறந்தபெருநாளைக் கொண்டாடியபோது, பரிசுத்தஸ்தானத்துக்கு அவரதுசீவியகால அருஞ்சேவைகளை அருளப்பபாப்பரசர் புகழ்ந்துபாராட்டினர்.

### டக்றர் கொன்றுட் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடினுர். இல்லை, ஓடும்படி அவரைத்துரத்தினர். அதனுல் எவருடைய அரசியல்வாழ்வு மங்காஒளியுடன் பிரகாசித்து வந்ததோ அவருடையஅரசியல் வாழ்வு மட்டுமல்ல, சமூகவாழ்வுமே எதிர்ப்பு, கண்டனம், சூழ்ச்சியாகிய இருளில்மூழ்கத் தொடங்கியது.

1933-ம்ஆண்டு ஹிற்லரின்அரசாங்கம் அடினேர்அவர்கள் வகித்திருந்த பதவிகள்அனைத்தையும் பறித்தெடுத்தது. மறுவருடம் அவரைச்சிறைவைத்தது. 1934-ம்ஆண்டுமுதல் 1944-ம் ஆண்டுவரை அவர்சிறைசெல்வதும், வெளிவருவதும், திரும்பவும் சிறைசெல்வதும், வெளிவருவதுமாகவே இருந்துவந்தது.

கடைசியாக இரண்டாவது மகாயுத்தம் முடிவடைந்து அமெரிக்கபடைகள் ஜேர்மனிக்குள் பிரவேசித்தபொழுதுதான் திரும்பவும்அவருக்கு நல்லகாலம்பிறந்தது. 1945-ம்ஆண்டு மீளவும் அவரைக் கொலோன்நகரின் "லோட்மேய"ராக நியமித்தனர். பின்னர் கிறீஸ்தவஜனநாயக கட்சியின் தலைவராகி ஜேர்மன் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் தெரிந்தெடுக்கப்பெற்றுர். இதிலிருந்துஅவர் மறுபடியும் புகழேணியில் மேல்நோக்கிச் சென்றுர். வருடந்தோறும் பதவி உயர்வுபெற்றுர். அத்துடன் அவர்புகழும், பெருமையும் எங்கும்பரவின.

1949-ம்ஆண்டு அவர் ஜேர்மன் சமஷ்டிக்குடியரசின் "சான்ஸலர்"ராகப் பதவியேற்றுர். பின்பு 1953-ம்ஆண்டு அதேபதவிக்கு மீண்டும்தெரிவுசெய்யப்பட்டு இப்பொழுது அப்பதவியைத் தொடர்ந்துவகித்துவருகிறுர். அவர் தீவிரமுயற்சியுள்ளவர். கையிட்டகருமம் கைகூடுகிறவரை அயராதுழைப்பவர். இப்பொழுதுஅவர் ஐக்கியஜேர்மனியை உருவாக்கமுனைந்துள்ளார். இந்தச்சிக்கலான பிரச்சினையிலே அவர் வெற்றி காண்பாரா? என்பதை வருங்காலசம்பவங்கள் நிர்ணயிக்கவேண்டும். இந்தக் கத்தோலிக்கபெருந்தலைவரான அவருடையபிள்ளைகள் எழுவரிலும் ஒருவர் ஒருகுருவாயிருந்துவருகிறுர்என்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கதுஎன்க.

---

● வத்திக்கான்இராச்சிய தபாற்கந்தோர் கிறிஸ்மஸை விஷயமாகக்கொண்டு சிலஇனப் புதியதபால்முத்திரைகளைச் சென்றமார்கழிமாதம் 4-ந்திகதியன்று பாவனைக்குவிடுக்கலாயிற்று. அவற்றுடன் அன்றுதினமே போலாந்தினதும், லிதுவானியாவினதும் பாதுகாவலரான அர்ச். கசிமீர் பிறந்த 500-ம்ஆண்டுநினைவுவிழாவை முன்னிட்டு மற்றும்சிலஇனப் புதிய தபால்முத்திரைகளை விடுத்துள்ளது.

● சோதிடசாஸ்திரிகளான மூவரசர்களுக்கும் வழிகாட்டிப்பிரபைகாலித்துச்சென்ற பெத்தலேமின்நட்சத்திரத்தைவர்ணிக்கும் விசேஷகிறிஸ்மஸ் தபால்முத்திரைஒன்றை ஆஸ்திறேலிய அரசாங்கம் சென்றகிறிஸ்மஸ்பண்டிகையைமுன்னிட்டுப்பாவனைக்குவிடுத்திருந்தது. ஐந்துபென்னிபெறுமதியுள்ள இந்தமுத்திரை கிறிஸ்மஸின்ஞாபகார்த்தமாக எந்தஒருநாட்டினுலும் அரிதாகப் பாவனைக்குவிடுக்கப்பெற்ற சிலதபால்முத்திரைகளில் ஒன்றுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே !

சென்றகிழமை திருச்சபையின் ஒற்றுமைவாரமென்றும், தங்கள் தாய்ச் சபையில்நின்று பிரிந்துபோன கிளைச்சபைகள்யாவும் திரும்பவும்வந்து சேர வேண்டுமென்றும் மன்ருடும்படி கேட்டுக்கொண்டோம். "வழியும், சத்தியமும், சீவியமும் நாமே." "என்வழியாலே யல்லாது பிதாவினிடத்திற் செல்கிறவன் ஒருவனுமேயில்லை" என்ற எமது இரட்சகர், தாம் தேவனென்று திறம்பாத தமது புதுமைகளினுல் அத்தாட்சிப் படுத்தியிருக்கிருர். தமது இரட்சணியத்தின் அலுவல் தமக்குப்பின் இவ்வுலகத்தில் தொடர்ந்து முடிக்கப்படுவதற்காய் அவர் ஓர்சபையை உண்டாக்கி, அச்சபையானது உலகமுடியுமட்டும் மனுஷரை ஈடேற்றும் அலுவலில்ஈடுபட வேண்டுமென்று வைக்கலானுர். அர்ச். இராயப்பரைப்பார்த்து: "நீ கல்லாயிருக்கிருய், இக்கல்லின்மேல் என்திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டாது" என்று சொல்லி, உலகில் யாவருமே காணத்தக்கதான, மனுஷரை அடக்கியுள்ள, சபையொன்றை உண்டாக்கினுர். இது, வேதாகமத்தில் மாத்திரமல்ல, உலகசரித்திரத்திலேயும் மறுக்கவியலாத உண்மையொன்ருய் விளங்குகின்றது. யூதர்கள், மகமதியர்கள், எவ்வித அஞ்ஞானிகள்தானும், இச்சபையொன்று உலகத்தில் உண்டுஎன்று மறுதலிப்பதில்லை.

ஆயின், கிறீஸ்துவை வழிபடுகிறவர்களுக்குள்தான் இச்சபையையிட்டு வாக்குவாதங்களுண்டு. ஏறக்குறைய ஐஞ்ஞுறுசபைகள் யேசுநாதர் உண்டாக்கிய சபையில்நின்று பிரிந்து, ஒவ்வொன்றும் தாம்தாமே உண்மையான சபையென்று வாதாடிநிற்கின்றது. கடந்த முன்னூறு வருஷங்களிலேயே இவைகளில் நானூறுகிளைகளும் தலைகாட்டி முளைத்தன. இவ்வலங்கோலத்தின் மத்தியில் நீவிர் திருச்சபையின் ஒற்றுமைக்காக மன்ருடவேண்டுமென்று நாம்கேட்பது அதிசயமா?

ஞானப்பிதா

—(⌣)—

## சிரிப்புக்குரிய சம்பவம்

# நான் ஒருமுட்டாள்

அன்ரனும், அருளும் இரட்டையாகப்பிறந்த சகோதரர்கள். அன்ரன் பரமசாது. அருள் விஷமக்காரன். இரண்டுபேரும் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை அன்ரன் மறுநாள் வகுப்புக்குரிய பாடங்களைப் படிப்பதில் கவனமாயிருந்தான். அருளோ நாளைக்குப் பாடசாலையில் புதிதாக என்னவிஷமம் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தான். திடீரென அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. உடனே காரியத்தில் ஈடுபட ஆரம்பித்தான். முதலில் நல்ல வெள்ளைக் காகிதத்தைச் சிறுசிறு துண்டுகளாகக் கத்தரித்து, ஒவ்வொன்றிலும் "நான் ஒருமுட்டாள்!" என்று எழுதினுன். அப்படி 24 துண்டுகள்எழுதித் தனது சேட்டையில்யாருக்கும்தெரியாமல் வைத்தான். இதெல்லாம் மறுதினம் பள்ளிக்கூடத்தில் பையன்களின் முதுகில்ஒட்டி வேடிக்கைபார்க்கத்தான். மறுநாள் 4துண்டுகளைமட்டும் எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போனுன். அங்கு தனதுவகுப்பில் பையன்கள்சிலரோடு தோளில் கை வைத்துக் கதைப்பதுபோல அவற்றை ஒட்டிவிட்டு நகர்ந்துவிட்டான். படிப்புமுடிந்து மத்தியானம் வீடு திரும்பும்பொழுது அந்தநான்குபேர் முதுகிலும் "நான் ஒருமுட்டாள்" என்றுஎழுதி ஒட்டியிருப்பதைக் கண்டு பள்ளிக்கூட முழுமாணவரும் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கேலிசெய்ததைச் சொல்லவும்வேண்டுமா? பாவம் அந்த நான்குபேரும் ஏதென்றறியாது பேந்தப்பேந்த விழித்து, வெட்கப்பட்டு ஒதுங்கிப் போய்த் தங்கள் சேட்டைக்கழற்றி அதில் ஒட்டியிருந்த துண்டைக் கிழித்து எறிந்துவிட்டார்கள். இப்படியே 24 துண்டுகளும் ஒட்டிமுடித்தான் அன்ரன். இந்த விஷமச்செயலைக் கண்டுபிடிக்க ஒருவராலும் முடியாது தலைமைஆசிரியருக்கும் எட்டிவிட்டது. ஆசிரியர்கள் அனைவரும் இந்தப் போக்கிரியைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் ஈடுபட்டார்கள். அவர்களோடு அருளும்சேர்ந்து அவனைப் பிடிப்பதற்காக ஊக்கமாய்த் திரிந்தான்.

அந்த வாரத்தில் உடற்பயிற்சி வகுப்புஇருந்தது. அருள் விளையாடாமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அப்பொழுது தலைமைஆசிரியர் கையில்பிரம்புடன் அவனண்டை அணுகி, ஏன்டா 'நான் ஒருமுட்டாள்' என்று எழுதினுய் எனக்கேட்டார். அருள்பயத்தால் நடுங்கி, "ஐயோ! மாஸ்றர் நான் இனிமேல் அப்படிஒன்றும் செய்யமாட்டேன்" என்று பள்ளிக்கூடம் அதிரஉளறினுன். யாவரும் அவனைச் சூழ்ந்துகொண்டனர். இதற்குள் ஆசிரியர்: "இவனுடைய முதுகிலும் 'நான் ஒருமுட்டாள்' என்றுஎழுதி ஒட்டியிருப்பதைப் பார்த்து, இது யார்எழுதியது என்றுகேட்க இப்படி உளறுகிருன். என்ன ஆச்சரியம்! தன்சட்டையில் இந்தத்துண்டு ஒட்டப்பட்டிருந்ததை இதுவரை இவன்கவனிக்கவில்லை" என்ருர் தலைமைஆசிரியர். இதைக்கேட்டதும் மாணவர்கள் எல்லோரும் ஓகோ என்று வாய்விட்டுச் சிரிக்கத்தொடங்கினர். பின் ஆசிரியர் அருளைக் கடுமையாக எச்சரித்துவிட்டுச் சென்ருர்.

பாவம், அருள் அன்று பிற்பகல் பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிடவே அவசரத்தில் தன்சேட்டுக்குப் பதிலாக அன்ரனின் சேட்டைப் போட்டுக்கொண்டு சென்ருன். அந்தச் சேட்டில் ஒட்டப்பட்டிருந்த துண்டு கிழிபடாததால் அவன்செய்த விஷமச்செயல் அவனைச்சிக்கவைத்தது. அதைக்கண்ட யாவரும் அவனைப்பார்த்து, "நீ ஒருமுட்டாள்" என்று கேலிசெய்யவும், அவனைப் பார்த்தவர்கள் வயிறுகுலுங்கச் சிரிக்கவும் ஆரம்பித்தனர். அதிலிருந்து அருள் விஷமம் செய்வதை விட்டு ஆலயம்சென்று அமலனைவழிபட்டு யேசுபாலனிடம் மன்னிப்புவேண்டி அன்னைமரியின் அருளானுன்.

திரேஸ் [illegible] பிள்ளை,
பா[illegible].

## மூவிராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும்

# நான்காம் ஞாயிறு

"அற்ப விசுவாசமுள்ளவர்களே, ஏன்பயப்படுகிறீர்கள்" (மத். 8, 23—27)

அந்தக்காலத்தில் யேசுநாதர் படகிலேறவே, அவருடைய சீஷர்களும் அவரோடு கூடப்போனுர்கள். அப்போது, திடீரெனப் படகு அலைகளால் மூழ்கிப்போகும்படியான விதமாய்க் கடலிலே பெரும்புயல் உண்டாயிற்று. அவரோ நித்திரை செய்துகொண்டிருந்தார். ஆகையால், அவருடைய சீஷர்கள் அவரிடத்தில்அணுகி அவரைஎழுப்பி: ஆண்டவரே, எங்களை இரட்சியும், செத்தோமென்ருர்கள். யேசுநாதர் அவர்களைப் பார்த்து: அற்ப விசுவாசமுள்ளவர்களே, ஏன் பயப்படுகிறீர்கள் என்றுசொல்லி, உடனேஎழுந்து, காற்றையும், கடலையும் அதட்டவே, மகாஅமரிக்கை உண்டாயிற்று. அங்கிருந்தமனிதர் பிரமித்து: இவர் எப்பேர்ப்பட்டவர்! காற்றும், கடலும் இவருக்கு அமைகின்றனவே என்று புகழ்ந்தார்கள்.

படகிலிருந்த அப்போஸ்தலர்கள் ஏன் பயப்பட்டிருக்கக்கூடாது? புசலோ மிகவேகமாய்அடித்துக்கொண்டிருந்தது. படகு இங்குமங்கும் அடிபட்டுக் கவிழ்ந்து போவதுபோல் தோன்றியது. உயிர்ச்சேதம் இன்னும்சொற்பநிமிஷங்களுள் நடக்கும்போல் காணப்பட்டது. அத்துடன் அவர்கள் யேசுநாதர் தேவனென்ற உண்மையைப் பூரணமாய் இன்னுமே விசுவசிக்காமலிருந்தார்கள். எத்தனையோ முறைகளிலே யேசுநாதர் இவர்களின் விசுவாசக்குறைவைக் கண்டித்துமிருக்கிறதை நாமறிவோம். ஆம், இவர்கள் அவர்தேவனென்று உறுதியாய் விசுவசித்திருந்தால் பயப்பட்டிருக்க மாட்டார்கள். எதிர்காலத்தின் அநிச்சயமே பயத்தின் காரணம்.

குழந்தைகள் இருளுக்குப் பயப்படுவது அது தன்னுள் என்னென்னத்தை அடக்கியுள்ளதோவென்ற அநிச்சயத்தாலல்லவா? அந்நியரையிட்டு நாம்பயப்படுவது அவர்கள்எப்பேர்ப்பட்டவர்களென்று எமக்குத் தெரியாததாலல்லவா. அறியாத ஒருவருடன் நாம் அந்நியர்கள் போலவே புழங்குகின்ருேம். சீஷர்களும் யேசுநாதரில் பூரணவிசுவாசங் கொண்டிராததினுல் தங்களுக்கு நேர்ந்த ஆபத்துவேளையில் ஓர்விதஅந்நியனைப்போல அவரைமதித்து, பயப்படத் தொடங்கினுர்கள். புயல்கெம்பீரமாயடித்தது. அவரோ நித்திரை செய்துகொண்டிருந்தார். விழிப்பாயிருக்கும்வேளையில் புயலடித்திருக்குமாயின் அவர்கள் அவரைத் தேடியிருக்கமாட்டார்கள்.

இவ்வண்ணமே இப்புவியில் தற்பரனுர் எம்முடனும் நடப்பதுண்டு. நல்லவர்கள் புயலிலடிபட்டு இடறற்படவும் மாளவும் விட்டுவிட்டு, தீயவர்கள் செழித்தோங்கிச் சித்தியடையப் பார்த்துக்கொண்டிருப்பார். ஆனுல், தமது நேரமானதும், தம் வல்லமையால் இப்புயல்கள் யாவையும் அடக்கியருள, அமைதியுண்டாகும். விசுவாசத்தின் செபமோ செயங் கொள்ளும்.

—(⌣)—

# தலைவனுயிருப்பது எப்படி?

"யூதாஸ்—ஆடு" என்று சொல்லப்படும் ஒருவெள்ளாடு முன்செல்ல, ஆயிரத்துக்கு மேற்பட்ட செம்மறி ஆடுகளை இறைச்சிக்காய்க் கொல்லும்படி கூட்டிப்போவது வியாபார விடங்களிலிருக்கும் ஒருவழக்கம். தங்களுக்குள்ளே ஓர்தலைவன் இல்லாததால், செம்மறிகள் வெள்ளாட்டின் தலைமையின்கீழ்ச்சென்று, தப்பவியலாத நிலைபரத்தில்தான் கண்விழிக்கின்றன.

இதேபோல, தற்காலத்திலிருக்கும் எத்தனையோ பொய்த்தலைவர்கள் "யூதாஸ்—ஆட்டுக்கு" ஒப்பானவர்களாயிருக்கின்றனர். தலைமைப்பதவியைப் பிழையாய்ப்பாவித்து, முன் ஓர்காலமுமில்லாதவிதமாய், சீரழிவுக்கும், தீயவொழுக்கத்துக்கும், கலாபனைகளுக்கும் காலாயிருக்கின்றனர். அவர்களிடத்திலே ஒருபயமுண்டு. உங்களைப்போன்ற நல்லவர்களில் சிலர் சிலவேளையெழுந்து தலைவர்களாகி, வேறுபேருடைய தலைமை தமக்குவேண்டாமென்று சொல்லிவிடுவார்களோ என்றதுதான் அந்தப்பயம். அவர்களின்பயம் எங்களுக்கு ஒருநம்பிக்கைக்குக் காரணமாயிருக்க வேண்டாமா? இதோ நல்லவோர் தலைவனுவதற்கு வேண்டிய 15விதிகள்.

1. தற்போதைய தேவையை அறிந்துகொள்ளப் பிரயாசப்படு.
2. மற்றவர்களை மதித்து நேசிக்க ஊக்கப்படு.
3. நீவகித்திருக்கும்பதவியிலிருந்து கொண்டுதானே தலைவனுய்வர இயலுமென்று நினைத்துக் கொள்.
4. உன்னுடைய அபிப்பிராயங்களை மற்ருேரும் அறியப்பண்ணு.
5. நீ போதிப்பதைச் சாதனையால் காட்டு.
6. மற்ருேரிடத்தில் காணப்படும் திறமையை யூகித்து மதித்துப் பிரயோசனப் படுத்தப்பார்.
7. உன் நோக்கத்தின் எல்லை நீண்டதும், அகண்டதுமாயிருக்கட்டும்.
8. சுயநலம்கருதா நோக்கமாவென்று விழிப்புடன் பார்.
9. மூலாதார விதிகளை அலட்சியம் பண்ணுதே.
10. நீ சரியானபாதையில் நின்று, நிச்சயமாய் விலகாமல் பார்த்துக்கொள்.
11. காரியத்தைச் செய்வதில் மற்ருேரைக் காத்திராதே. நீயே தொடங்கு.

[ தொடர்ச்சி 8-ம்பக்கம் ]

## உறுதிவாக்காளர் பகுதி II.

(a) இம்மாசத்தில் தங்கள்பிறந்த நாளைக் கொண்டாடும் பின்வரும் உறுதி வாக்காளர்களுக்குத் தேவ ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்ருேம். (8) ஜே. ஜே. மனோகரன் (தை 17.); (12) இ. இஞ்ஞாசிமுத்து (தை 5.).

(b) பின்வரும் இலக்கம்கொண்ட வாக்காளர்கள் வேண்டப்பட்ட தங்களது திகதிகள் யாவையும் நிரப்பி யனுப்பவில்லை; கூடிய சீக்கிரத்தில் அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிருேம்; இல: 4, 5, 7, 8, 10, 11, 12.

(c) உறுதிவாக்காளர்கள் யாவரும் இத்தாபனத்தில் சொல்லப்படும் திவ்விய பூசைவேளையிலும், நடக்கும் நாளாந்த திவ்விய நற்கருணை ஆராதனை வேளையிலும் விசேஷவிதமாய் நினைவுகூரப்படுவார்கள்.

(d) தாங்கள் காட்டிய திடாரிக்க செயலை இன்னும் அநேக இளைஞர்கள் நன்மனசுடன் செய்யப்பண்ணப் பிரயாசப்படுவர். "வாலிப வயசில் உன் தேவனை மறவாதே" என்ற கூற்றுக்கிசைய, தாங்களும் தங்களோடொத்த வயசுடைய அனைவரும் [illegible] மறவாமல் நற்சீவியம் [illegible] பிரயாசிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

மரம் சரிவதுண்டு, கட்டிடம் பாறி விழுவதுண்டு, கப்பல் புரண்டு தாண்டுபோவதுண்டு, நட்டங்கள் ஏற்படுவதுண்டு. இத்தகைய நட்டங்களுள் ஒன்றுதான் இற்றைக்குப் 13 வருடங்களுக்கு முன் வண. சுவாமி ஞானப்பிரகாசரின் மடிவால் எமக்கும், யாழ்ப்பாணத் திருச்சபைக்கும் ஏற்பட்டது. எம் மேற்றிராசனத்தில் உண்மை வேதம் வளரும்படியாய் 42 வருடங்களாக அல்லும் பகலும் இவர் அயராது உழைத்தார். ஐயாயிரவருக்கு மேற்பட்டோர்க்கு ஞானஸ்நானம் கொடுத்துச் சத்தியமறையில் சேர்த்தும், 37 கோவில்களை அடியிட்டுப் பரிபாலித்தும் வந்திருக்கிறார். இவர் சத்திய மறையையிட்டு எழுதிய நூல்கள் எத்தனையோவுண்டு. தமிழ்ப்பாஷையில் தேர்ந்த பழமாய் தாம் மரணிக்குமுன் அப்பாஷையின் உச்சித நிலையைக் காட்டிவைக்கவெண்ணி, ''ஒப்பியல் அகராதி'' ஒன்றை எழுத ஆரம்பித்தார். ஆறு புஸ்தகங்கள் எழுதியதும், அந்தோ! மரணத்திரையில் மறையலானார்.

அடுத்தவாரம் வெளிவரும் 'பாதுகாவல'னில் செல்வி ஜெஸ்ஸி பத்திநாதன் வரையும் இவரது சீவிய சரிதையை வாசிக்கத் தவறாதீர்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணா.

## கோழை

— வே. சாமுவேல் —

அன்று எங்கள் வீட்டில் ஒரே பரபரப்பாக இருந்தது. காரணம், எங்கள் புகையிலைத் தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தெளிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த "பொலிடொல்" திராவகப் புட்டியைக் காணவில்லை. அது ஒரு நச்சுத்திராவகம். ஆகையால் அதை மறைத்தே வைத்திருப்பது வழக்கம். ஆனால், அன்றோ அது மாயமாக மறைந்துவிட்டது. தேடியவர்களும் சற்று நேரத்தில் சலிப்படைந்து தேடும் முயற்சியைக் கைவிட்டுவிட்டனர். ஆனால், எனக்கு மட்டும் அதன் திடீர் மறைவு பல சந்தேகங்களை வருவித்தது.

இப்படிச் சந்தேகங்கள் எழுந்ததற்குக் காரணம் நம்நாட்டில் தற்போது பெருகிவரும் தற்கொலைகளே. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் அது ஒருதொற்றுநோய்போல் இருக்கிறது. பரீட்சையில் தோல்விகண்டவர்கள், இன்னும் தாம் எண்ணிய எண்ணங்கள் ஈடேறவில்லை என்ற காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொண்டவர்களைப் பற்றி நாம் தினசரி பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம்.

இப்படிச் சந்தேக அலைகள் என் எண்ணத்தில் மோதின. ஈற்றில் எதிர்வீட்டுஆனந்தனில் எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. ஏனெனில், அவன் பரீட்சையில் சித்தியடையவில்லையே என்று சோர்வோடு இருந்ததும் என் ஞாபகத்திற்கு வந்தது. உடனே விரைந்துசென்றேன். பல இடங்களிலும் அவனைத்தேடினேன். ஈற்றில் கடற்கரையிலே ஒரு மரநிழலின்கீழ் தனியேஉட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தான். நான் அவனைக்கண்டதும், "என்ன ஆனந்தம்! யோசனை அதிகமாயிருக்கிறதே"என்றேன். அதற்குஅவன், "இந்த உலகத்தில் நான் ஏன் வாழவேண்டும்?" என்று பதிலளித்தான். இவ்விடத்தில் என் துப்பறியும் வேலைக்குப் பெரும்வெற்றி கிடைத்துவிட்டதென எண்ணினேன். சம்பாஷணை தொடர்ந்தது.

நான்: "ஆகா, ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? வாழ்க்கையில் வெறுப்பேற்படக் காரணம் யாது?

ஆனந்தன்: "பரீட்சையிற் தோல்வி கண்டபிறகுமா நான் வாழவேண்டும்?

நான்: "நீ ஒரு கோழை! உன் பேச்சைக் கேட்கவே வெட்கமாக இருக்கிறது; நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ மனிதன் பரீட்சைக்காக வாழ்ந்துகொண் டிருப்பதுபோலல்லவா தோன்றுகிறது? வாழ்க்கையில் வெற்றி தோல்வி சுழல் சக்கரம். அவற்றைக் கண்டு மனதைத் தளரவிட்டுவிட்டால், நாம் சர்வேசுரனுக்காக வாழமுடியாது; சர்வேசுரன் தந்த இவ்வாழ்வு அவருக்காகவே வாழ்ந்து கழியவேண்டும்; இன்னும் நாம் அவருக்காகச்சீவித்தால் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றாது; சரி, நீ வைத்திருக்கும் பொலிடொல் புட்டியைக் கொடு" என்று கொடுத்துவைத்தவன்போலக் கேட்டேன்.

சற்றுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, "நான்தான் அதை எடுத்தேனென்று யார் சொன்னார்கள்?" என்றான்.

"யாருமேசொல்லத்தேவையில்லை;

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## நீதான் சமர்த்தன்



சாத்தானைப்பற்றிச் சொல்லப்படும் ஓர்சம்பவம் இதுவாகும். அது தன்னுடைய பாடசாலையிலிருந்து நன்கு பயிற்சிபெற்றுப் பண்பட்டுப் புதிதாய் வெளியேறிய பைசாச குழுவிலே அதிகம் தேர்ச்சியடைந்தனவும், அதிகம் நம்பிக்கைக் குரியனவுமான சிலபிசாசுகளைத் தெரிந்தெடுப்பதில் உறங்கத்தானும் நேரமின்றி மிகவும் ஊக்கமாக ஈடுபட்டிருந்தது. ஏன்? மனித வர்க்கத்துக்குச் சோதனை உண்டுபண்ணி அவர்களைக் கெடுத்து மோசஞ்செய்யுமாறு பூலோகத்துக்கு அனுப்புவதற்காகவே. அதனால், அது தெரிவுசெய்த பிசாசுகளில் ஒவ்வொன்றையும் விழித்து, "ஆத்துமாக்களைக் கெடுத்தழிப்பதாகிய உங்கள் மகத்தான தொண்டிலே நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டது.

அவற்றில் ஒன்று வீரத்துவமாக எழுந்துநின்று, "அரசபெருமானே! கடவுளில்லை, பேய்பிசாசில்லை, மோட்சமில்லை, நரகமில்லை; நீங்கள் நன்றாக உண்டு, குடித்து, உடுத்து, களித்து உல்லாசமாகக் காலத்தைக் கழிக்கவேண்டும். ஏனெனில், இன்றைக்கு இருப்பாரை நாளைக்கும் இருப்பரென்று நம்ப இடமில்லை..." என்றெல்லாம் வர்ணித்து வாசாலமாகக் கூறியது.

இதைக்கேட்ட சாத்தான் அதனை ஓர்தரம் கூர்ந்து பார்த்துவிட்டு, "இல்லை, இல்லை; உனது தந்திரம் வெற்றிதரப் போவதில்லை; ஏனெனில், ஒருவருமே உன்னை நம்பமாட்டார்கள்; போதும், போதும் அம்மட்டில்நிறுத்து; நீஅடைந்த பயிற்சி இதுதானா?" என்று பரிகசித்துக் கூறியது.

அடுத்தபடியாக மற்றோர்பிசாசம் அதிகம் உத்தண்டத்துடன் எழுந்துநின்று கரங்குவித்து, "ஆண்டவனே! திருச்சபை எவ்வளவோ பெரும் நன்மையெல்லாம் செய்கிறது; ஆனால், அது போதிக்கிறவைகளில் அரைவாசிமட்டும் உண்மை; மற்ற அரைவாசியும் படு பொய்யென்று நான் போய் அவர்களுக் கெல்லாம் சொல்லுவேன்; மேலும் கடவுள் ஒருவர் இருக்கிறார்; மோட்சமும் இருக்கிறது; ஆனால், பேய்பிசாசுமில்லை; நரகமுமில்லை; நீங்கள் எப்படிச் சீவித்தாலும் காரியமில்லை; நீங்கள் எப்படியாவது மனப்பாக்கியமாய் இருப்பீர்கள் என்றெல்லாம் அவர்களுக்கு எடுத்துக்கூறுவேன்" என்றது.


இதைக்கேட்ட சாத்தான் அதனை ஓர்தரம் விறைக்கப் பார்த்துவிட்டு, "இல்லை, நான் உன்னை எங்காவது போக விடமாட்டேன்; அவர்களில் ஓர்சிறு தொகையினரே நீ சொல்வதற்குச் செவிசாய்ப்பார்கள்; மற்றவர்கள் உன்னை நம்பவும் மாட்டார்கள், நீ சொல்வதைச் செவியில்விழுத்தவும் மாட்டார்கள்; போதும், போதும், உனது தந்திரோபாயம்; நிறுத்து" என்று கூறியது.

மூன்றாவதாக, அவைகளிலெல்லாம் அதிகம் புத்திசாதுரியம் படைத்த வேதாளம் ஒன்று உற்சாகத்துடன் எழுந்து, தலைவணங்கிக் கும்பிட்டுவிட்டுக் கூறியதாவது: "திருச்சபை போதிக்கிற ஒவ்வோர் காரியமும் உண்மையென்றும், கடவுளோ, சாத்தானோ இருவரில் ஒருவரை நீங்கள் தெரிவுசெய்துகொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்வேன்; ஆனால், அதைப்பற்றி இப்போதைக்கு அவசரப்படத் தேவையுமில்லை, ஆத்திரப்படவேண்டியதுமில்லை, பையமெல்லப் பார்க்கலாம்; இன்னும் காலம் இருக்கிறது தானேயென்று ஏமாற்றித் தந்திரமாகக்கூறுவேன்" என்றது.

இதைக் கேட்டதே சாத்தானின் முகம் பூரித்தது. சட்டெனத் தனது ஆசனத்தை விட்டெழுந்து, அந்தப் பிசாசின் முதுகிலே தட்டிக்கொடுத்து, மிகுந்த குதூகலத்துடன், "நீதான் சமர்த்தன்; என் வீர தொண்டனே! உடனேதானே புறப்பட்டுப் போ; உனக்குத் தேவைப்படும் துணைவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு புறப்படு; எல்லாவற்றிலும் மிகச்சிறந்த திட்டம் உன்னுடையது" என்று சொல்லி அதனை வழியனுப்பிவைத்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

By Scio



[1] ஐக்கிய அமெரிக்க தேசத்திலே தேவைக்குக் கண்டு மீதியாய்ச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கோதுமை முதலாம் விவசாய விளைபொருட்கள் உலகிலுள்ள அறுபதுக்கு மேற்பட்ட நாடுகளிலே அவசியம் தேவைப்படும் மக்களுக்கு உதவிசெய்யப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களில் அகதிகளும், பயிர்கள் விளைந்து பலனளியாததாலும், வெள்ளப்பெருக்குகளாலும், மழை பெய்துகொடாததாலும், உள்நாட்டுச் சண்டைகளாலும் கஷ்டப்படுகிறவர்களும், பாடசாலைப் பிள்ளைகளும் அடங்குவார்கள்.

[2] பிரான்ஸிலே பிறெனீஸ் மலையில் சூரிய காங்கைகொண்டு இயங்கும் கொல்லுலைக்கூடம் ஒன்று 6,000 பாகை வெப்பத்தை உண்டுபண்ணி மிகவும் கடினமான லோகங்களை உருக்கிவிடுகின்றது. 35 அடி நீளமான பிரதிபிம்பிக்கச் செய்யும் கண்ணாடி ஒன்று தானாய் இயங்கிச் சூரியனை ஈர்ந்துகொள்ளும் தட்டையான ஓர் நிலைக்கண்ணாடியிலிருந்து சூரியகதிர்களைப் பெற்றுக்கொள்ளுகின்றது.

[3] பாற்கட்டி என அறியப்படும் பாலாடைக் கட்டி ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்ட இனங்களில் செய்யப்படுகிறது. ஒட்டகங்கள், வரிக்கழுதைகள், ஒற்றைத்திமில் ஒட்டகங்கள், கலைமான்கள் உட்பட அநேக மிருகங்களின் பாலிலிருந்து அது செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீதான் சமர்த்தன்

(பாலர்பக்கத் தொடர்ச்சி)

'அகத்தின் அழகுதான் முகத்தில் தெரிகிறதே'; வேறுசாட்சியும்வேண்டுமா?" என்றேன்.

உடனே தான் சட்டைப்பையில் வைத்திருந்த அப்புட்டியை எடுத்துக் கீழே எறிந்தான். உடனே நான் அதைக் கையில் எடுத்துக் கொண்டு, "ஆனந்தா! நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? தற்கொலை மகாபெரிய பாவம் என்று அறிந்த நீயா இப்படிச் செய்யத் துணிந்தாய்? தோல்வியைக் கண்டு கலங்காதே; தோல்வியே வெற்றிக் கடையாளம்என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்; மறுமுறை நீ கட்டாயமாகச் சித்தியடைவாய்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தேன். அவனும் அதை ஆமோதித்தது போலத் தலையை அசைத்தான். அன்றுமுதல் அவன் நடத்தையைச் சிலகாலத்துக்குக் கண்காணித்து வந்தேன்.

---

### தலைவனயிருப்பது எப்படி?

[ இளைஞர்பக்கத் தொடர்ச்சி ]

12. தீர்மானம்பண்ணுவதில் நியாய மற்றமுறையில் தாமதியாதே.
13. ஓர் பழக்கமுண்டாவது செய்கைகளினலேயே. தலைமை வாய்ப்பதினலேயே தலைவனுமாகின்றாய் என்று நினைந்துகொள்.
14. மற்றோர் தவிர்த்துவிடப் பார்க்கும் கருமங்களை, நீ முன்னின்று செய்யப் பழகு.
15. கஷ்டங்களைப் பயமின்றிச் சும. அதுவே தலைவனுக்குரிய குறிக்கோள்.

---

● அமெரிக்கக்கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் வருடம்ஒன்றுக்குத்திருச்சபைக்குச் சராசரி 20டலர்கொடுப்பதாகப் புள்ளிவிபரம் வெளியாயிருக்கிறது. அதனால் சராசரியாகப் 10,000 பேரைக்கொண்ட ஓர்விசாரணைப்பங்கிலே வருடந்தோறும் 2,00,000டலர் வரை கொடுக்கப்படுகிறது. இதில் அரைவாசி அவ்விசாரணைப்பங்கிலேயே தங்கிவிட, மற்றஅரைவாசி அந்தவிசாரணைப்பங்கு இருந்துவரும் மேற்றிராசனத்துக்கும், பொதுத்திருச்சபைக்கும் போகின்றது.

● சமீபத்திலே சிசிலிதீவைச் சேர்ந்த காற்றுனியாபட்டணத்தில் நடந்தேறிய இத்தாலிய தேசீயசற்பிரசாத மகாநாட்டுக்குவேண்டிய நற்கருணை ஒஸ்திகள்செய்யப் பாவிக்குமாறு வேதாகமத்துடன் சம்பந்தப்பட்ட கப்பர்னவும்நகரில் உற்பத்தி செய்யப்பட்ட கோதுமையை அராபியர்கள்இருவர் உபகரித்தார்கள்.

* * *

### கம்யூனிஸ்தர்களுக்கு எச்சரிக்கை

65-வது இந்தியதேசிய காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமைவகித்த காங்கிரஸ் தலைவர் திரு. என். சஞ்சீவி ரெட்டி அவர்கள் சென்ற 16-ந் திகதியன்று நிகழ்த்திய தம்முடையதலைமை உரையில் "கம்யூனிஸ்தர்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஓர் இடறுகட்டையாக உருவெடுத்தால் அல்லது 'ஐந்தாம் படை'யாக விளங்கினல் அவர்களைப் பூண்டோடுஅழிக்க நாம் கடும்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும்அவர் கூறியதாவது: "கம்யூனிஸ்தர்கள் இந்நாட்டிலே தங்கள் மூலபலத்தை இழந்துவிட்டனர்; அதற்குப்பதில் இப்போது அவர்கள் எமக்கு "அந்நியமான ஏதோஒன்று"க்கு விசுவாசம் காட்டும் மனப்போக்கை வளர்க்கத் தலைப்பட்டுள்ளனர்; அடுத்துவரும் கேரளபொதுத்தேர்தலில் சுயேச்சையாளரும், முன்னணிக்கட்சியினரும் சேர்ந்து கம்யூனிஸ்தர்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பார்களென நம்புகிறேன்."

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு ... | 6 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2857**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

அச்செழு
1. கதிரவேலு கந்தையாவும்,
2. மனைவி பொன்னம்மாவும்
— வழக்காளிகள்.

எதிராக, அச்செழு
சோமர் முத்துக்குமாரு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2857-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1960-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மீ 27-ந்உ சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1289-உம், மேலும், 820 ரூபாவுக்கு 8-6-59 திகதிதொடக்கம் 4-8-59 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 8%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 178ரூபா 52 சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்குப்பகுதி, கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலிஇறை, "கவடி ஒல்லை" நிலப்பரப்பு 10-உம், செய்பயிர், வான்பயிர்களும், தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு — இராமலிங்கம் சரவணமுத்துவுக்கும், மறுபேர்களுக்கும் உரியஆதனம். வடக்கு — சரவணை தம்பிமுத்துவுக்கும், மறுபேர்களுக்கும் உரியஆதனங்கள். மேற்கு — சிதம்பரம், அம்பலவாணசுவாமி கோவிலுக்குரியது. தெற்கு — சின்னத்தம்பி சம்பந்தருக்கும், மறுபேர்களுக்கும் உரிய ஆதனங்கள். இதில் சொரியலாய் அரைவாசிப் பங்கு.

2. ஷை நீர்வேலிஇறை "கவடிஒல்லை" நிலப்பரப்பு 18½-யும், மேற்கே கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு — சிதம்பரம், அம்பலவாணசாமி கோவிலுக்கும், E. சின்னச்சிப்பிள்ளையின் உரிமைக்காரர்களுடைய ஆதனமும். வடக்கு — ஷை கோவிலுக்குரியது. மேற்கு — வல்லிபுரம் கைம்பெண் முத்துப்பிள்ளைக்குரியது. தெற்கு — வல்லிபுரம் மனைவி சிவகாமனுக்குரியது. இதில் சொரியலாய் நாற்பத்தெட்டில் முப்பத்தொருபங்கு ($\frac{31}{48}$).

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.
643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 8-1-60.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்றும் சகாயம்புரியும் பரிசுத்த சதா சகாயமாதாவின் கருணையால் நான் அவவை வேண்டிக்கொண்டபடி, என்மனைவி ஓர் ஆண்மகவை வீட்டிலேயே ஒருகஷ்டமும்இன்றிச் சுகமாய்ப் பிரசவித்ததற்காகவும், இன்னும் எனக்கும், என்குடும்பத்திற்கும் முடிந்தவருஷத்தில் செய்தசகாயங்களுக்காகவும் நன்றியறிதலாய் இதைப் பிரசுரிப்பதுமன்றித் தாண்டவன்வெளி, பரி. வியாகுலமாதாகோவிலில் 20-1-60-இல் ஓர்பாடற்பூசையும் சொல்லுவித்தேன். அவவின்நாமம் புகழப்படுவதாக.

மாதாவின் பக்தன்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 599 T.**

சுளிபுரம், காலஞ்சென்ற
வைரமுத்து நாகலிங்கத்தின்
ஆதனத்தின் உரிமைத் தத்துவகாரி.
சுளிபுரம், வைரமுத்து நாகலிங்கம்
கைம்பெண் சாரதாம்பாள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 599T இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1960-ம் ஆண்டு மாசிமாதம் 20-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோயிற்பற்று, சுளிபுரம்இறை "மங்கனஒலை" பா. நில. இலா. மூன்றும், (ப. நி. இ. 3) வீடும். எல்லை: கிழக்கு — சுப்பர் வேலுப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கைமுகப்பும், ஒழுங்கையும், தனுவார் மாரிமுத்துவின் ஆதனமும். மேற்கு— வேலர் கைம்பெண் கந்தரின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசி.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1752**

கோப்பாய் கிழக்கு
தம்பையா மயில்வாகனம்
— வழக்காளி.

எதிராக, மட்டுவில்
இராமலிங்கம் சந்திரசேகரம்
— எதிராளி.

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டின் M. B. 1752-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1960-ம் ஆண்டு பங்குனிமீ 3-ந்உ வியாழக்கிழமை முதலாங்காணி முற்பகல் 10மணிக்கும், இரண்டாம்காணி மத்தியானம் 12மணிக்கும், மூன்றும் காணி பிற்பகல் 2மணிக்கும் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1,000-த்துக்குப் 19-7-57 தொடக்கம், 21-1-58 மட்டும் 7%வட்டியும், கோட்டுச்செலவு 191 ரூபா 77சதமும்.

தீர்வைத்தொகை முதல்வட்டிக்குத் தீர்வைத்திகதி தொடக்கம் 100-க்கு 5% வட்டியையும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் மட்டுவில்பகுதி கோவில்பற்று, சாவகச்சேரிஇறை "முதலிசாடி" என்னும்காணி நில. பா. 7. எல்லை: கிழக்கு — கணவதிப்பிள்ளையின் மனைவி சின்னம்மாவின் ஆதனம். வடக்கும், மேற்கும் — ஒழுங்கை. தெற்கு — நாகமுத்து சிவகுருவின் ஆதனம்.

2. ஷைஇறை மட்டுவில்தெற்கு "உப்புறவி வயல்" என்னும்காணி நில. பா. 33½. எல்லை: கிழக்கும், வடக்கும், தெற்கும் — எதிராளி இராசலிங்கம் சந்திரசேகரத்தின் ஆதனம். மேற்கு — வாய்க்காலும், எதிராளியின் ஆதனமும் உண்டு. இதில் பிரிக்கப்படாத ½பங்கு.

3. ஷைஇறை மட்டுவில்வடக்கு "கருநாவல்புட்டி" என்னும்காணி நில. பா. 22¾. எல்லை: கிழக்கு — றேட்டு வடக்கு — கணவதிப்பிள்ளை வேலுப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — சரவணை குமாரவேலுவின் ஆதனம் தெற்கு — உலகநாதர் செல்லருக்கும், மறுபேருக்கும் உரியஆதனம்.

**ஆர். கனகரத்தினம்,**
கொம்மிஷனர்,
நம். 35, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

In the matter of the Intestate estate of Mariamma wido of Innasimuttu Amirthanathar of Valvettiturai.

Testamentary Jurisdiction } No. 656

Saminathapillai Sebastiampillai of do. Petitioner.

Vs.

1. Bastiampillai Soosaipillai of Valvettiturai.
2. J. X. R. Anthonipillai C/o. Roy Bandaranayaka, Hokandaya Road, Hunnupitiya.
3. Selvanathar Anthonipillai, St. Thomas' Church Lane, Mathagal.
4. Edward Selvanathar, Teacher Fatima School, Pesalai.
5. Joseph Selvanathar, 5/3, Nicodemus Lane, Catholic Press Road, Jaffna.
6. C. V. Amirthanayagam and wife.
7. Mary Theresa both of Masassabel House, Mathagal.

Respondents.

This matter coming on for disposal before S. Thamby Durai Esquire District Judge of Point Pedro on the 20th day of November 1959 in th presence of Mr. A. N. Velayutham Proctor on the part of the Petitioner and the Petition and affidavit of the Petitioner having been read:

It is ordered that the Petitioner as nephew of the deceased be declared entitled to obtain Letters of Administration to the estate of the deceased and such Letters of Administration be accordingly issued to him unless the Respondents or any other person shall appear before this Court on or before the 28th day of January 1960 and shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 20th day of November 1959.
15th day of December 1959

Sgd. M. ESURAPATHAM,
A/District Judge.

Drawn by:
Sgd. A. N. Velayutham,
Proctor for Petitioner.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரி. தேவதாயாரிடமும், அர்ச். யூதாததேயுவிடமும் நான்வேண்டியபடி என் மகள் பரீட்சையில் முதற்றரமாகச் சித்தி பெற்றார். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்
மிசிஸ் ஈ. ரி.
வத்தளை

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரி. சதாசகாயமாதா, யேசுவின் சிறியபுஷ்பமாகிய அர்ச். தெரேசம்மாள் இவர்களின் மன்றாட்டாலும் எனக்குக் கிடைத்த சகாயத்திற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்பண்ணுகிறேன். இவர்களின் புகழ் எங்கும்புகழப்படுவதாக. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.
ஏ. ஏ. ஜி. எஸ்.

* * *

நம்பினோரைக் கைவிடாத பரி. சதா சகாயமாதாவுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம். கடந்த இரண்டுவருட காலமாக வாதநோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், பத்து வருடங்களுக்குப்பின் ஆறுவதுகுழந்தையும் கர்ப்பந்தரிக்க அதனுல் மனக்கவலையடைந்து, பரிசுத்த சதா சகாயமாதாவை, பரி. 12-ம் பத்திநாத பாப்பானவர், உத்தரிக்கிற ஆத்துமாக்களின் உதவியோடு நான் அனுதினமும் இரந்துமன்றாடியதன்பேரில் சுகபிரசவமடைந்து, ஒருஆண்குழந்தையையும் பெற்றெடுத்ததோடு என்வியாதியும் நீங்கிப் பூரணசுகம் கிடைத்தமைக்கு என்முழு இருதயத்தோடு நன்றியறிந்த ஸ்தோத்திரம்பண்ணுகிறேன். பரி. சதாசகாயமாதாவின்நாமம் உலகமுழுவதும் புகழப்படுவதாக.
மிசிஸ் அ. தோமாஸ்.
கண்டி

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 28-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org